

BRITISH COUNCIL

# சமூக வலுவூட்டலுக்கான ஒரு பயணம்

## பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்த்தல்

# சமூக வலுவூட்டலுக்கான ஒரு பயணம்

## பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்த்தல்

பிரிடிஷ் கவுன்சிலுடன் பணியாற்றுவதற்கு கூட்டாக இணைத்த பங்காளர்கள்:

9 789559 055556

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| சொற்சுருக்க பட்டியல் | 2 |
| அணிந்துரை | 3 |
| நிகழ்ச்சி- ஒர் கண்ணோட்டத்தில் | 4 |
| பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதில் பிரிடிஷ் கவுன்ஸிலின் அணுகுமுறை | 5 |
| அறிமுகம் | 6 |
| முறையியல் | 9 |
| பிரதான  செயற்பாட்டாளர்கள் | 11 |
| பெண்களின் குரல்கள் | 15 |
| ஆண்களின் குரல்கள் | 19 |
| இளைஞர்களின் குரல்கள் | 21 |
| சமூக  இலகுபடுத்துனர்களின் குரல்கள் | 23 |
| அரசாங்க  பங்குதாரர்களின் குரல்கள் | 25 |
| தேசிய கருத்தவை | 27 |
| பரிந்துரைகள் | 28 |
| ஒருங்கிணைப்பாளர்கள் | 29 |
| அடைவு | 30 |
| ஆக்டிவ் சிட்டிசன்களின் குரல்கள் | 31 |
| அவசர/ உடனடி சேவை | 33 |

# சொற்சுருக்க பட்டியல்

| | |
|---|---|
| **ADD** | Alcohol, Drugs and Development<br>மதுபானம், போதைப்பொருள் மற்றும் அபிவிருத்தி |
| **CRPP** | Child Rights Protection and Promotion<br>சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு |
| **DEVAW** | Declaration on the Elimination of Violence Against Women<br>பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பிரகடனம் |
| **FISD** | Foundation for Innovative Social Development<br>புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு |
| **GAD** | Gender and Development<br>பால்நிலை மற்றும் அபிவிருத்தி |
| **JSAC** | Jaffna Social Action Center<br>யாழ் சமூக செயற்பாட்டு மையம் |
| **LGBTQIA+** | Lesbian, Gay, Bisexual, Transgender, Queer, Intersex, Asexual +<br>L-பெண் தன்பாலின சேர்க்கையாளர்<br>G-ஆண் தன்பாலின சேர்க்கையாளர்<br>B-இரு பாலின சேர்க்கையாளர்,<br>T- திருநங்கை/ திருநம்பி<br>Q - பால்புதுமையினர்<br>I- பன்முக பால்பண்பு,<br>A- பாலீர்ப்பு அற்றவர் |
| **NPA** | National Plan of Action<br>தேசிய செயற்பாட்டிற்கான திட்டம் |
| **SAP** | Social Action Project<br>சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் |
| **SGBV** | Sexual and Gender-Based Violence<br>பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை |
| **VAWG** | Violence Against Women and Girls<br>பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் |
| **WDO** | Women Development Officer<br>பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **WRDS** | Women Rural Development Society<br>பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் |

# அணிந்துரை



**ஜில் கல்டிகொட்,**

இலங்கைக்கான பணிப்பாளர்,
பிரிட்டிஷ் கவுன்சில், இலங்கை,
(ஆவணி 2017 - ஆவணி 2020)

கடந்த 2.5 வருடகாலமாக அமுல்படுத்தப்பட்ட நற்தாக்கம் மிக்க செயற்றிட்டத்தின் கதைகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் பரிந்துரைகளின் ஓர் தொகுப்பான, சமூக வலுவூட்டலுக்கான ஒரு பயணம் - பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை (VAWG) அடையாளம் கண்டு தீர்த்தல் எனும் சிற்றேட்டிற்கான (Book-let) அணிந்துரையை நான் பெருமகிழ்ச்சியுடன் எழுதுகிறேன். அக்டிவ் சிட்டிஸனின் முறையியலை பயன்படுத்தி பெண்கள் மற்றும் இளைஞர்களை இணைத்து, அவர்கள் தங்கள் சொந்த சமுகத்தில் மாற்றத்தினை கொண்டுவருவதற்கு வலுவூட்டப்பட்டமை இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை தனித்துவமானதாக ஆக்கியிருக்கிறது.

நாம் அனைவரும் அறிந்திருப்பதைப் போல, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை (VAWG) என்பது இலங்கைக்கோ ஆசியாவிற்கோ மட்டுப்படுத்தப்பட்ட பிராந்திய ரீதியிலான பிரச்சனை அல்ல; மாறாக சர்வதேச ரீதியிலான பிரச்சனை. பழமையான, பாரபட்சமான, மற்றும் அடிப்படையில் பெண்களின் மனித உரிமைகளை குறைத்து மதிப்பிடும் சமூகங்களில் ஆழமாக பொறிக்கப்பட்ட அணுகுமுறைகள் மற்றும் சமூக விதிமுறைகளுக்கூடாக பெண்கள் மற்றும் சமூகத்தில் அவர்களின் பங்கு பற்றி சிந்திப்பதிலிருந்து இப் பிரச்சனை தோன்றுகிறது. இவற்றை அடையாளம் கண்டு தீர்த்தல் எளிதான பணியல்ல. இதற்கான மாற்றம் விரைவாகவோ எளிதாகவோ ஏற்படாது எனினும், பிரிடிஷ் கவுன்ஸில் இப்பயணத்திற்கு பங்களிப்பு செய்துள்ளமை என்னை மகிழ்விக்கின்றது. பிரிடிஷ் கவுன்ஸிலானது கடந்த சில வருடங்களாக அதிகளவில் பால்நிலை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. முன்னோக்கி செல்கையில், உலகளாவிய ரீதியில் இந்த விடயம் முக்கியமாகவும் முன்னுரிமை உடையதாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். பெண்கள், உடல் உள ரீதியான வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் குறித்த அச்சத்தில் இருந்து விடுபடும் வரை, அவர்கள் சமூகத்தில் தங்களுக்குரிய சரியான இடத்தை அடைந்து கொள்ளா ஆரம்பிக்க முடியாது.

எங்கள் உடனுழைப்பில் முக்கிய பங்குவகித்த புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு (FISD) மற்றும் யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC), ஜனதக்ஷன் மற்றும் ஹாஸ்டேக் தலைமுறை ஆகிய பங்காளர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்.

நாங்கள் ஒன்றாக சேர்ந்து செய்த பணிகள், சரியான திசையில் செல்வதற்கான ஒரு படியாகும், மேலும் சமூகத்தில் பெண்களின் உரிமைகளை விஸ்தரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என்று நம்புகிறேன்.



# நிகழ்ச்சி- ஓர் கண்ணோட்டத்தில்




**2018 - 2020**

உலகளாவிய ரீதியிலான பிரச்சனையான பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை, குறிப்பாக பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு ஏதுவான இலங்கையின் உள்ளூர் சமூகங்கள் சேர்ந்து இயங்குவதற்கு அவர்களின் நெகிழ்திறனை வலிமைப்படுத்தி கடந்த இரண்டு வருடமாக வலுவூட்டப்பட்டு வருகின்றன.

**4** மாவட்டங்கள்

**6** பிரதேச செயலகங்களுக்குட்-பட்ட 6 கிராமங்கள்

**13** இலகுபடுத்துனர்கள்

**20** சமூகங்கள்

**150** பெண்கள்

**450** அக்டிவ் சிட்டிஸன்கள்

**300** இளைஞர்கள்

**150** ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகளூடாக நேரடியாக இணைந்த ஆண்கள்

**1800** சமூக பயனாளிகள்

**40** சமூக இடையீடுகள் / சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

ஈடுபட்டிருந்த சேவை வழங்குநர்கள் **200**


**3** மாவட்ட கருத்தவை

**1** தேசிய சமூக ஊடகப் பிரச்சாரம்

**1** தேசிய கருத்தவை

# பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதில் பிரிடிஷ் கவுன்ஸிலின் அணுகுமுறை

பெண்கள் மற்றும் சிறுமிகளின் வலுவூட்டல் தொடர்பான மாற்றத்தின் கோட்பாடானது பால்நிலை சமத்துவமின்மையைப் பல்வேறு பார்வைக் கோணங்களில் கையாள்வதுடன் பல்வேறுபட்ட பங்குதாரர்களையும் உள்வாங்குகிறது. இது தனிநபர், சிவில் சமூகம், தனியார் துறை, அரசு மற்றும் சமூகம் ஆகிய மட்டங்களில் இயங்குகின்றதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதுமான பின்வரும் ஐந்து விளைவுகளை வரைவிலக்கணப்படுத்துகிறது.



# அறிமுகம்



1993 பெண்களுக்கெதிரான வன்முறையினை ஒழிப்பதற்கான பிரகடமானது பொது அல்லது தனி வாழ்க்கையில், பெண்களை அச்சுறுத்துகின்ற செயல், வற்புறுத்தல் அல்லது தன்னிச்சையான சுதந்திரத்தை பறித்தல் உள்ளடங்கலாக உடல், பாலியல் மற்றும் உள ரீதியாக பெண்களுக்கு தீங்கு அல்லது துன்பம் விளைவிக்கும் அல்லது விளைவிக்க கூடிய எந்தவொரு பால்நிலை சார் வன்முறை செயலையும் குறிக்கும் என வரைவிலக்கணப்படுத்துகிறது.

36 வீதமான ஆண்கள் ஒரு "பெண் துணை" மீது உடல் ரீதியான பாலியல் வன்முறைகளையும், 6 வீதமான "ஆண்கள் துணை அல்லாத பெண்ணொருவர்" மீதும், 17 வீதமான ஆண்கள் "பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு உள்ளடங்கலான " பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளதாக கெயர் இன்டர்நேஷனலின் (CARE International) அறிக்கை ஒன்று வெளிப்படுத்தியிருந்தது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் பொலிஸ் அறிக்கையில், பாலியல் வன்புணர்வு மற்றும் நெருங்கிய உறவுகளிடையேயான பாலியல் தொடர்புகள் போன்ற வழக்குகள் முறையே 2150 மற்றும் 2175 என கூறப்பட்டுள்ளது. பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் வீட்டிற்குள் நிகழுகின்ற போதும், பொதுவாக குற்றவாளி குடும்ப உறுப்பினராக இருப்பதனால், இவை குறைந்தளவிலேயே முறைப்பாடு செய்யப்படுகின்றன.

'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல்' எனும் நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையில் காணப்படுகின்ற பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைக் (SGBV) கலாச்சாரத்தைக் கையாள்வதற்கு எண்ணியது. பிரிடிஷ் கவுன்ஸில், புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு (FISD) இனை, மூலோபாய மற்றும் செயற்படுத்தலுக்கான பிரதான பங்காளராக இணைத்துக் கொள்ள, அவர்கள், சமூகங்களுடன் பாலமாக செயற்படுவதற்கு யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC), ஜனதக்ஷன் மற்றும் ஹாஸ்டாக் தலைமுறையினரைக் கொண்ட அமுலாக்க பங்காளர்களுக்கான கூட்டை உருவாக்கினர். இவர்கள் ஒன்று சேர்ந்து, தலைமைத்துவ பண்புகள், நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்தும் சமூக தலைமைத்துவ நிகழ்ச்சியான பிரிடிஷ் கவுன்ஸிலின் அக்டிவ் சிட்டிஸன் மாதிரியை கொண்டு ; பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல் எனும் தொனிப்பொருளை மையப்படுத்தி, தெரிவு செய்த சமூகங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (VAWG) சார்ந்த பிரச்சனைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கேதுவான இந் நிகழ்ச்சித்திட்ட மாதிரி ஒன்றை உருவாக்கினர்.



இவர்கள் ஒன்று சேர்ந்து, தெரிவு செய்யப்பட்ட சமூகங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக, தலைமைத்துவ பண்புகள், நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றை மேம்படுத்துகின்ற சமூக தலைமைத்துவ நிகழ்ச்சியான பிரிடிஷ் கவுன்ஸிலின் அக்டிவ் சிட்டிஸன் மாதிரியை உபயோகித்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை எனும் தொனிப்பொருளுக்கமைவாக இந் நிகழ்ச்சித்திட்ட மாதிரி ஒன்றை வடிவமைத்தனர்.

பங்கேற்பாளர்கள் தங்கள் உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாக பங்களிக்கும் முகமாக இந்த நிகழ்ச்சி திட்டமானது கல்வி, திறன்கள், தனிநபர் வளர்ச்சி மற்றும் ஒருவருக்கொருவர்

இடைத்தொடர்புகள் போன்றவற்றை வழங்கியது. இந்த நிகழ்சித்திட்டம், இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான தேசிய செயல் திட்டத்தின் 'வருமுன் தடுத்தல்' மற்றும் ' இடையீட்டுக்கான ' பரிந்துரைகளை (NPA-SGBV 2016-2020) உள்ளடக்கியிருந்தது.

இந்த திட்டத்தில், சமூகத்தில் உள்ள பங்குதாரர்களான , அரச அமைப்புக்கள் (சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு மற்றும் மாகாண கல்வி அதிகாரசபைகள் போன்றவை) மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் (சிவில் சமூக அமைப்புகள், ஆலோசகர்கள் மற்றும் பயிற்சிவிப்பாளர்கள் போன்றவை) பங்குபற்றினார்கள்.


ஆரம்பம் முதல் முடிவு வரை, இந்த திட்டமானது மூன்று முதன்மை படிகளின் வழியாக நகர்ந்தது: திறன் மேம்பாடு, சமூகங்களில் துடிப்பான ஈடுபாடு மற்றும் எதிர்கால வளர்ச்சி மற்றும் இடையீட்டிற்கான இணைப்பை கட்டியமைத்தல்.

இந்த திட்டமானது 4 முக்கிய மாகாணங்களில் இயங்கியது : ஊவா மாகாணம் (மொணராகலை), தெற்கு மாகாணம் (அம்பாந்தோட்டை), வடக்கு மாகாணம் (யாழ்ப்பாணம்) மற்றும் கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு). இந்த மாகாணங்களுக்குள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (VAWG) அதிகளவு காணப்படும் , 6 பிரதேச சபைகளுக்குற்பட்ட 20 உள்ளூர் சமூகங்கள் மற்றும் கிராமங்கள், தெரிவுசெய்யப்பட்டன. மொணராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகியவற்றில் அதிக அளவு வறுமை, மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் பெறமுடியாத சமூக சேவைகள் காணப்பட்டன; இலங்கையின் 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (VAWG) அதிகரித்து காணப்பட்டன.

தளத்தில், மக்களதும் சமூகத்தினதும் கண்ணோட்டம், ஒருவருக்கொருவரான இடைத்தொடர்புகள் மற்றும் மக்களினதும் சமூகத்தினதும் பழக்கவழக்கங்களை மாற்றுவதில் இத் திட்டம் கவனம் செலுத்தியது. பால்நிலை சமத்துவம் மற்றும் பால்நிலை பாகுபாடு பற்றி அறிய, திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி அமர்வுகளில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டகொண்டதுடன் ; அவர்களின் தலைமைத்துவ திறன்களை வளர்த்துக் கொண்டு சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தனர் . ஆண்கள் சகபாடிகளாகவும், 'மாற்றத்தின் முகவர்களாகவும்' ஆக்குவதற்காக விழிப்புணர்வு அமர்வுகளில் பங்குபற்றினார்கள்



பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான தேசிய செயல் திட்டம் (SGBV) 2016-2020 இன் 'தடுத்தல் மற்றும் வலுவூட்டல்' தொடர்பான அத்தியாயம் (chapter) சமூகங்களை வலிமைப்படுத்தல் மற்றும், சமூக தலைவர்கள் மற்றும் பிரதேச மட்ட சேவை வழங்குனர்களைக் கொண்ட உதவி குழுக்களின் உருவாக்கத்தை பரிந்துரைக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் சேவை வழங்குனர்களை அணுகுவதற்கு உதவும் முகமாக, இந் நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட மட்டத்தில் உள்ள பங்குதாரர்கள்(பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்றவர்கள்) மற்றும் பிரதேச மட்டத்தில் உள்ள பங்குதாரர்கள் (கிராம உத்தியோகத்தர் போன்றவர்கள்) ஆகியோருக்கு பயிற்சிபட்டறை நடாத்தப்பட்டது என புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பின் (FISD) பணிப்பாளர், சமிதா சுகதிமால, குறிப்பிட்டார்.



"சமூக மட்டத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளை வலிமைப்படுத்தி, அவர்களுக்கு எதிரான பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளை (SGBV) மேலும் புரிந்து கொள்ளவும் அடையாளப்படுத்தவும் சம்பவங்களுக்கு (cases) பதிலளிக்க பிரதேச சேவை வழங்குனர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். சேவை வழங்குனர்களின் திறனை விருத்தி செய்வதன் மூலம் அவர்களின் பதில்களை சீரான முறையில் ஒருங்கிணைத்தமை தேசிய செயட்பாட்டு திட்டத்திற்கு பங்களித்தது."

**சமிதா சுகதிமால,**

நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர்
புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு

அதேபோல், 2019 இல் கொழும்பில் நடைபெற்ற தேசிய கருத்தவையின் போது, பல தரப்பட்ட துறைகளுக்கிடையிலான தொடர்புகளை நிகழ்ச்சித்திட்டத்தில் உருவாக்கியதை பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான தர்ஷனா சேனநாயக்க அவர்கள் மிகவும் பாராட்டினார்:





"இந் நிகழ்ச்சித் திட்டத்தில் அனைத்து அங்கங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பதை நான் காண்கிறேன். இந் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெற்ற படிப்பினைகள் தேசிய செயற்பாட்டிற்கான திட்டத்தினை மேலும் அமுல்படுத்த பங்களிக்கும் என்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு இத்தகைய அணுகுமுறையை கடைபிடிக்க விரும்புபவர்களை ஊக்கப்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன்."

**திருமதி. தர்ஷன சேனநாயக்க**

செயலாளர், பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு,
தேசிய கருத்தவை கொழும்பு 2019.

பங்குதாரர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் மொணராகலை, அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நடைபெற்ற கருத்தவைக்கு வருகை தந்திருந்தார்கள். 2019 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின், மட்டக்களப்பில் நடைபெறவிருந்த கருத்தவை ரத்துசெய்யப்பட்டது. நற்சாட்சி தொடர்கள், சிறந்த வழக்கங்கள், மற்றும் பரிந்துரைகளை உள்ளூர் கருத்தவை சுட்டிக்காட்டியது. மேலும், இது அனைத்து சமூகங்களிலுமுள்ள பங்கேற்பாளர்களுக்கு இது உரையாடல், அறிவு பகிர்வு மற்றும் அனுபவ பரிமாற்றம் ஆகியவற்றுக்கு ஒரு தளமாக அமைந்தது.

அனைத்துப் பங்காளர்களும் பங்கேற்பார்களும் 2019 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற தேசிய கருத்தவையில் கலந்துகொண்டார்கள்


தேசிய செயற்பாட்டிற்கான திட்டம் (NPA) பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை(SGBV) 2016 -2020 அமுல்படுத்தல் தொடர்பான பரிந்துரைகளை கட்டமைக்க இந் நிகழ்வு வழிவகுத்தது. நற்சாட்சி, விடய ஆய்வு மற்றும் நேரலை ஒளிபரப்பு போன்ற ஆக்கத்திறன்மிக்க முறைமைகள் மூலம் நிகழ்வின் போது இடம்பெற்ற குறிப்பிடத்தக்க விடயங்களை நிகழ்ச்சித் திட்டத்தின் காலகட்டத்தில் பகிர்வதற்கு ஒரு தேசிய சமூக ஊடக பிரச்சாரம் உருவாக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் நடாத்தப்பட்டது.





# முறையியல்

## கற்றல் பயணம்: நதி




அக்டிவ் சிட்டிஸனைப் போலவே, "பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு சமூகங்களை வலிவூட்டல்" எனும் திட்டமானது "நதி" என்று அழைக்கப்படும் ஒரு கற்றல் பயணத்தில் வேரூன்றப்பட்டிருந்தது.


ஐந்து நாட்களாக, தமது கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பங்குபற்றுனர்கள் பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டார்கள். இது உள்ளூர் சமூகங்கள் மற்றும் சமூக வட்டாரங்களில் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளுடன் (SGBV) தொடர்புபட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இலகுபடுத்துனர்கள் கண்ணோட்டங்கள், வழக்கங்கள் மற்றும் வழக்காற்று நியமங்கள் பற்றிய திறனாய்வுச் சிந்தனையை ஊக்குவிக்கக் கூடிய உகந்த மற்றும் ஒன்றிணைந்த தளங்களை, உருவாக்கினார்கள்.

'அக்டிவ் சிட்டிஸன் கருவித்தொகுப்பை' அடிப்படையாகக் கொண்டு, இலகுபடுத்துனர்கள் உரையாடலை தூண்டி கருத்துக்களை வெளிக் கொண்டு வருவதற்கு மீன் குவளை நுட்பத்தையும் மற்றும் சமூகத்தின் நேர்முக எதிர்முக அம்சங்களை அடையாளம் காண்பதற்காக சமூக வரைபட கருவிகள் போன்ற பயிற்சிகளைப் பயன்படுத்தினர்.

இறுதியாக, இந்த கற்றல் பயணம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளில் (VAWG) இடையிடுவதற்கு சமூக செயட்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமைப்பதில் உச்சக் கட்டத்தை அடைந்தது. பங்குபற்றுனர்கள் உள்ளூர் சமூகங்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பங்குதாரர்களைப் பட்டியலிட வேண்டியிருந்தமையால் இதில் அவர்கள் சமூக வலுவூட்டல் மாதிரியை ஒன்றிணைத்தனர்.











**சாரோ லெனோவோ,**

அக்டிவ் சிட்டிஸன் பிரதான இலகுபடுத்துனர் (ஐக்கிய இராச்சியம்) மற்றும் சமூக தலைமைத்துவ பயிற்றிவிப்பாளர்

“பதினெட்டு மாதங்களிற்கு முன்னர், அக்டிவ் சிட்டிஸன் பயிற்சியினை இலங்கையில் அளிப்பதற்காக எனக்கு ஒரு கோரிக்கை வந்தது. இது மிகவும் பிரத்தியேக கோரிக்கையாக இருந்தது, ஏனெனில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை கண்டு தீர்ப்பதற்காக, சமூக தலைமைத்துவ நிகழ்ச்சி வடிவமான அக்டிவ் சிட்டிஸனின் முறையியலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியதாக இருந்தது. நான்கு மாவட்டங்களில் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமானதால் இது மிகவும் சவாலானதாக அமைந்தது. 2018 ஆடி மாதத்தில், முப்பது இலகுபடுத்துனர்களுக்கு பயிற்சியளித்த அணியில் ஒருவராக நானும் இருந்தேன்.

பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு, தேசிய கருத்தவையில், இந்த திட்டத்தை நான்கு மாவட்டங்களிலிருந்தும் பங்குபற்றியவர்கள் முன்கொண்டு வந்திருந்தார்கள். இத் திட்டமானது நாம் அனைவரும் எவ்வாறு மாற்றங்களாக மாற முடியும் என்பதுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில், எமது பயணம், இலகுபடுத்தல் மற்றும் முறையியல் ஆகியவற்றினை நாம் பிரதிப்பலித்திருந்தோம். எதிர்காலத்திற்காக பல சாத்தியக்கூறுகள் உள்ளன.

குறிப்பாக, மிகவும் பிரத்தியேகமான தொனிப்பொருளில் தாங்கள் எவ்வாறு சேர்ந்து பணியாற்றினார்கள் என்பதனை பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் அவர்களது பங்குதாரர்கள் உலகின் ஏனைய குதிகளிலுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நான் ஊக்குவிக்கிறேன். இந் நிகழ்ச்சித்திட்டமானது சிறுமிகள் மற்றும் பெண்கள் பற்றியது மாத்திரமல்ல, ஒட்டுமொத்த சமூகத்தினையும் பற்றியது என்பதனை எங்களுக்கு நினைவூட்டியது.”



# பிரதான செயற்பாட்டாளர்கள்

## பங்காளர்கள்

“பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல்” எனும் முயற்சியானது உள்ளக பங்காளர்களின் கூட்டணியை உள்ளக சமூகங்களினை இணைக்கின்ற பாலமாக ஒன்றிணைத்தது. பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறைகளுக்கு எதிரான போராட்டத்தின் நிலை பேண்தகு விளைவுகளுக்காக அர்ப்பணித்து செயற்படுகின்ற சிவில் சமூக, கல்விசார் மற்றும் இளைஞர்கள் ஆகியோருடன் தொடர்புபட்ட அமைப்புக்கள் பங்காளர்களில் அடங்குவர்.

### புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு (FISD)

FISD ஆனது நியாயமும் சமத்துவமுமான சிவில் சமூகத்தினை உருவாக்குவதற்கான பொருத்தமான செயன்முறைகளை உருவாக்குவதனூடாக நிலை பேண்தகு சமூக அபிவிருத்தியை அடைவதற்காக பங்குதாரர்களுக்கு மிகச்சிறந்த தீர்வுகளை வழங்குகிறது. FISD ஆனது சிறுவர் உரிமை பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் (CRPP), பால்நிலை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (GAD) மற்றும் மதுபானம், போதைப்பொருள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (ADD) ஆகியவற்றுக்காகப் பிரசித்தம் பெற்றது



“நிகழ்ச்சித்திட்டத்தின் உரிமையை சமூக மட்ட பெண்கள், ஆண்கள் மற்றும் இளைஞர்களிடம் கொடுத்தல் என்ற மைய அடித்தளத்தினைக் கொண்டு கட்டமைக்கப்பட்டமையே இத்திட்டத்தின் வெற்றியாகும். விளைவாக, பாலியல் மற்றும் பால்நிலை ஆகியவற்றுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக சமூகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் சமூகத்தினால்-தலைமைத்தாங்கப்பட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் கவுன்ஸிலுடனான பங்காளித்துமானது ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக பங்குதாரர்களுடன் புதிய பங்காளித்துவத்தினை உருவாக்குவதற்கும் நிகழ்ச்சித்திட்ட பிரதேசங்களிலுள்ள பங்காளித்துவங்களை வலுவூட்டுவதற்கும் உதவியது.”

**சமிதா சுகதிமால,**
பணிப்பாளர், FISD

### ஜனதக்ஷன்

ஜனதக்ஷன் என்பது இலங்கையின் அபிவிருத்திக்கான நிலை பேண்தகு மற்றும் பசுமையான (சூழலுக்கு இயைந்த) தீர்வுகளை வழங்குகின்ற இலாப நோக்கற்ற ஓர் அமைப்பாகும். ஜனதக்ஷன் கல்விசார் பரிமாற்றங்களை ஊக்குவித்ததுடன் எதிர்கால பயிலுனர்கள், அபிவிருத்திசார் அமைப்புகள், ஆய்வாளர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் ஆகியோருக்கு நிபுணத்துவம் வாய்ந்த தகவல்களை பரிமாற்றி வந்துள்ளது.

“பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற இருபத்திநான்கு பெண் தலைவர்கள், ஐந்து நாட்களைக் கொண்ட பயிற்சிநெறியில் பங்குபற்றியிருந்தார்கள். இங்கே, அவர்கள் பிரச்சனையின் ஆழம் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்பனவற்றை கற்றுக்கொண்டார்கள். பயிற்சிநெறியின் முடிவில், சமூக செயற்பாட்டு செயற்றிட்டங்கள் உள்ளூர் பங்குதாரர்களையும் சமூக மட்ட அங்கத்தவர்களையும் சமூக அபிவிருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஊக்குவித்தன.”



**ஜானக ஹேமதிலக**
பிரதி பணிப்பாளர், ஜனதக்ஷன்

## யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC)

யாழ் சமூக செயற்பட்டு மையமானது யாழ்குடா, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தனது சேவைகளை வழங்கிவருகின்ற ஒரு இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனமாகும். JSAC நிறுவனமானது அனர்த்தம் மற்றும் உள அதிர்ச்சி ஆகியவற்றினை கட்டுப்படுத்துகின்ற மற்றும் நிலை பேண்தகு அபிவிருத்தியை மேம்படுத்துகின்ற செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது. குறிப்பாக, சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக பணிபுரிகிறது.




"JSAC நிறுவனமானது அக்டிவ் சிட்டிஸனின் முறையியலை அமுல்படுத்தியதில் பல வெற்றிக் கதைகளைக் கொண்டுள்ளது. பால்நிலை வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்வு காண்பதற்கு சமூகங்களை, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களை வலுவூட்டுவதில் பயனுள்ளதாக அமைந்தது. அவர்களது திறன்களை வளர்த்தல் மற்றும் வலையமைப்புகளையும் தளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற உதவிகளினூடாக நாங்கள் சமூகத்தினை நிலைநிறுத்திக் கொண்டோம்.

திட்டத்தின் இறுதிக் கட்டத்தில், நாங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு கருத்தவையினை முன்னெடுத்திருந்தோம். அது வெற்றிகரமாக அமைந்தது. ஏனெனில், தங்கள் அனுபவங்களை சமூகத்துடன் பகிர்வதற்காக பல்வேறுபட்ட பயிலுனர்கள் ஒரே தளத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக மாணவர்களும் பங்குபற்றி, தமது கருத்துக்களைப் பகிர்ந்ததுடன் எதிர்கால செயற்பாடுகளில் தமது ஆர்வத்தினையும் வெளிப்படுத்தியிருந்தனர்."

**நடராஜா சுகிர்தராஜ்,**

இணைப்பாளர், JSAC

## ஹாஷ்டாக் தலைமுறை

ஹாஷ்டாக் தலைமுறை ஆனது சிவில் மற்றும் பொருளாதாரத்தில் இளைஞர்களின் பங்களிப்பில்; குறிப்பாக பால்நிலை, இனம் மற்றும் பாலியல் அடையாளங்களினால் ஒதுக்கப்பட்ட இளைஞர்களின் பங்களிப்பில் ஆர்வமும் சமூக துடிப்புமுள்ள இலங்கை இளைஞர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.

2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, இவ் அமைப்பானது அரசியலில் பெண்களின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்காக '#WeGovernSL' மற்றும் LGBTQIA+ இளைஞர்களுக்கான இணையதள பாதுகாப்பு மற்றும் பரிந்துரை தொடர்பான பயிற்சிகள் போன்ற செயல்திட்டங்களை தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றினூடாக நடைமுறைப்படுத்துகின்றது.

"இந் நிகழ்ச்சித்திட்டத்தில் ஹாஷ்டாக் தலைமுறை அமைப்பின் பங்கானது இரண்டு வகையானது முழு நிகழ்ச்சித்திட்டத்துக்குமான தொடர்பாடல் பிரச்சாரத்தினை நாம் முன்னெடுத்தோம். வழமையாக, பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் தொடர்பான கருத்துக்களை நாம் நிபுணர்களிடமிருந்து மாத்திரமே பெறுகின்றோம். எமது பிரச்சாரமானது, வெவ்வேறு மாவட்டங்களினை சேர்ந்த பெண்கள், ஆண்கள், இளைஞர்களின் கருத்துக்களைக்/குரல்களைக் கொண்டிருந்தது. சிலருக்கு பிரச்சனையானது வாழ்ந்து முடித்த யதார்த்தமாகும் . நாங்கள் மட்டக்களப்பிலுள்ள இளைஞர்களுக்கான பயிற்சியையும் நடாத்தியிருந்தோம். நிகழ்ச்சித்திட்ட கால வட்டத்தில், குறிப்பாக, சமூக செயற்பாட்டு செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் போது, பிரச்சனைகள் தொடர்பான அவர்களது மனப்பாங்கு மாறுவதனை எங்களால் பார்க்க முடிந்தது. இந் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் நாம் எமது பிரசாரங்களை வடிவமைத்து இளைஞர்களை அணிதிரட்டுவதற்கான வழிவகையையும் நெறிப்படுத்தியிருந்தன.



(இடமிருந்து வலமாக)

**மஹிஷா பால்ராஜ், செனெல் வன்னியாராட்சி**

இணைநிறுவனர்கள் மற்றும் பணிப்பாளர்கள்.

**சஹானி டிக்கும்புற**

தன்னார்வ நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்

ஹாஷ்டாக் தலைமுறை

## ஒருங்கிணைப்பாளர்கள்/ இலகுபடுத்துனர்கள்

நிகழ்ச்சித்திட்டத்தின் பங்காளர்கள், சமூக மட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இலகுபடுத்துனர்களை தெரிவு செய்து பயிற்றிவித்தனர். இந்த விடயத்தினூடான அவர்களின் தொடர்பு, சமூகம் குறித்த அவர்களின் அறிவு, தனிநபரிடை மற்றும் தகவல் தொடர்பு ஆற்றல் ஆகியவை நிகழ்ச்சித்திட்ட செயல்படுத்தலை வலுப்படுத்தியது.

அவர்கள்; பயிற்சிநெறியின் இலகுபடுத்தல், கலந்துரையாடல் மற்றும் சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கான வழிகாட்டலூடாக திட்டத்தின் நோக்கத்தினை பங்குபற்றியவர்களுக்குத் தெரிவித்தனர்.



## மாவட்ட மற்றும் சமூக பங்குதாரர்கள்

மாவட்ட மட்டத்தினுள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை தொடர்பான பிரச்சனைகளுக்கான பாதுகாப்பு, உளவள துணை மற்றும் ஆற்றுப்படுத்தல் சேவைகளை வழங்குகின்ற கிராம உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாகவுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு, சேவைகளை வழங்கி வருகின்றது. அவர்கள் மாவட்ட அமைப்புகளான சிறுவர் பிரிவு மற்றும் சமூக சேவை அமைப்புகளுடன் தொடர்வுபட்டுள்ளார்கள்.



"எமது பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் சிறுமிகளுக்கான கல்வி அணுகலை விருத்தி செய்வதற்கான அவசியத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் நிலையில், இலங்கையில் எதிர்மாறாக, சிறுவன்களைக் காட்டிலும் சிறுமிகள் சிறப்பாக செயல்படும் சூழலே காணப்படுகிறது. இலங்கையானது சிறுமிகளின் கல்வியிலே ஒரு பெரும் அடைவை எட்டியுள்ளமை மிகவும் திருப்திகரமாக அமைந்தாலும், அதிகளவு சிறுவன்கள் கல்வியிலிருந்து இடைவிலக்குவதற்கான காரணிகளை கண்டறிந்து தீர்வு காண்பது முக்கியமான விடயமாகும்."

**உதயனி நவரட்ணம்,**

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.



**N. தமயந்தி**

பெண்களின் அபிவிருத்திக்கான அமைப்பு,
கட்டுவான, அம்பாந்தோட்டை

"சிறிய சமூகங்களில் ஏற்படுகின்ற பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் போதைப்பொருள்/ மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஸ்பிரயோகங்களினால் ஏற்படுகிறது. நான் சமூகத்திற்குத் திரும்பியவுடன் மேற்கொள்ள வேண்டிய அனைத்து கடமைகள் மற்றும் பொறுப்புகளை அமர்வுகளின் போது குறித்து வைத்திருந்தேன்.

ஒரு திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மேலதிக தகவல்களைப் பெற்றிருந்தேன். நான் ஒரு வலுவுள்ள மற்றும் திறமையான பெண் என்பதையும் கற்றுக்கொண்டேன். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், நான் முன்னேற்றமடைந்துள்ளதுடன் மேலும் சாதிப்பதற்கான எதிர்காலத்தினை நோக்குகிறேன்"

## வளவாளர்கள்

இந் நிகழ்ச்சித்திட்டமானது பால்நிலை, சட்ட ஆலோசனை, உளநல சுகாதாரம் போன்ற விடயப்பரப்புகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களை வளவாளர்களாக தெரிவுசெய்தது. அதன் விளைவாக, பங்கேற்றவர்கள் தமது சமூக மட்டத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை எதிர்த்துநிற்க நிபுணர்களின் உதவியைப் பெற்றிருந்தார்கள்.

"பால்நிலை வன்முறைகளின் பின்புலத்திலுள்ள சட்ட சூழலைக் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் பயன் ஆகியவற்றைக் குறித்து பங்கேற்பாளர்களிடையே மிகவும் நேர்மறையான மனப்பாங்கினை நான் அவதானித்தேன். பெரும்பாலான பங்கேற்பாளர்கள் பகிரப்பட்ட விடயங்கள் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அவர்களின் சமூக செயற்பாடுகளுக்குப் பயனளித்தன என்று கூறியிருந்தார்கள். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சிக்கல்களைக் கையாள்வதற்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட மற்றும் நெறிமுறைகளுக்கு அமைவான வழிமுறைகள் குறித்து கொடுக்கப்பட்ட விரிவான தகவல்களையும் பங்கேற்பாளர்கள் பாராட்டியிருந்தனர். சட்ட உதவி தொடர்பான தகவல்கள் மற்றும் ஏனைய சேவைகளுக்கும் அவர்கள் துலங்கலை வெளிப்படுத்தியிருந்தனர்."



**சஜிவனி அபயகோன்**

சட்ட அலுவலர், சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை.

## பங்குபற்றியவர்கள்

"பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையாயை அடையாளம் கண்டு தீர்த்தல்" திட்டமானது தனது பார்வையினை பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான பெண்கள் மற்றும் இளைஞர்கள் மீது செலுத்துகிறது. தெரிவு செய்யப்பட்ட பெண்கள் சமூகத்தில் தலைவர்களாகக் காணப்பட்ட நிலையில் இளைஞர்கள் கல்வி மற்றும் இதர பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட்டு ஆற்றல் மிக்கவர்களாக காணப்பட்டனர்

பயிற்சிநெறியானது அவர்கள் தங்கள் சமூகத்தின் தலைவர்களாகவும் அடுத்த தலைமுறையினருக்கான முன்மாதிரிகளாகவும் உருவாவதற்காக, அவர்களது மனப்பாங்கு மற்றும் நடத்தை மாற்றங்களில் கவனம் செலுத்தியிருந்தது. பங்கேற்றவர்கள் சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் உச்சத்தை அடைகின்ற ஒரு கற்றல் பயணத்துடன் இணைந்திருந்தார். இங்கே, அவர்கள் சமூக மட்டத்தில் ஒரு நேர்முகத் தாக்கத்தினை ஏற்படுத்தினார்கள், தொடர்புகளை கட்டியெழுப்பினார்கள், பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறைகளுக்கு எதிரான தேசிய மட்ட இயக்கத்தில் இணைந்தார்கள்.

"பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை தொடர்பான அக்டிவ் சிட்டிஸன் பயிற்சிநெறிக்கு பின்னர், எமது பிரதேசத்திலுள்ள ஏனைய இளைஞர்களுடன் ஒரு சிறிய ஆலோசனை நடத்தினோம். எமது கிராமத்திலுள்ள போதைப்பொருள் / மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் திருமணம் ஆகியவை தொடர்பாக மக்களை அறிவூட்ட வேண்டுமெனத் தீர்மானித்தோம். இந் நிகழ்ச்சித்திட்டத்தில் நாங்கள் விவாத அரங்கினைக் கற்றிருந்தோம். நான் நாடகவியலில் பேரார்வம் கொண்டவள் மற்றும் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு விவாத அரங்கினைத் தயாரிக்கலாம் என முன்மொழிந்தேன். ஒரு இளம் பெண்ணாக எமது சமூகத்தில் நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுப்பது என்பது சவாலான விடயமாக மாறியது. ஆனால், இந் நிகழ்ச்சித்திட்டமானது எனது மற்றும் எனது சமூகத்திலுள்ள பெண்களின் வாழ்க்கையை என்னால் முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கையையும் அதற்கான கருவிகளையும் கொடுத்திருந்தது."



**தட்ஷாயினி**

அக்டிவ் சிட்டிஸன் மற்றும் சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் குழுத் தலைவி, மட்டக்களப்பு

# பெண்களின் குரல்கள்

"நான் பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையை, குறிப்பாக எனது திருமண வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்தில் எதிர்கொண்டேன்," என்று புத்தல பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியரும் வகுருவெல பெண்கள் அமைப்பின் தலைவருமான கே.எம். ரத்னாவதி கூறினார்.

அவர் தனது சமூகத்திலும் பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டிருக்கிறார். அவரும் அவரது சமூகத்தில் உள்ள மற்ற பெண்களும் முகக்கொடுக்கின்ற வன்முறையானது தகவல்களை அணுக முடியாமை மற்றும் அப்பகுதியில் உள்ள பெண்களின் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளில் வேரூன்றியுள்ளதாக அவர் நம்புகிறார்.

"நாங்கள் அத்தகைய பெண்களின் எண்ணங்களை உரக்கப் பேசி குரல் கொடுக்கக் கூடிய ஒரு தலைமுறையை வளர்த்தோம்," என்று கே.எம். ரத்னாவதி கூறினார். இந்த நிகழ்ச்சித்திட்டமானது அவரது சமூகத்திலுள்ள பால்நிலை தொடர்பான பார்வைக்கோணத்தினை மாற்றுவதற்கு உதவியது என அவர் நம்புகிறார்.





**கே. எம். ரத்னாவதி**

ஆக்டிவ் சிட்டிசன்,
புத்தல, மொனராகலை

இந் நிகழ்ச்சித்திட்டத்தில் அவர் பங்கேற்றது அவரது வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் வன்முறையைக் கையாள்வதற்கான திறன்களை வழங்கியது. கற்றுக்கொண்ட பாடத்தின் உதவியுடன், அவர் அவரது சமூகம் தகவல்களையும் வளங்களையும் பெறுவதற்கு உதவுவதற்காக "மகிழ்வான சமூகம் ஒன்றினை நோக்கி" என்ற சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்தார்.

"பெண்களும் ஆண்களும் சமமற்றவர்கள் அல்ல- உண்மையில் அவர்கள் சமமானவர்கள். எமது சமூகமும் எமது நிகழ்வில் கலந்து கொண்ட மக்களும் இதனை புரிந்து கொண்டிருந்தார்கள். மற்றும் சமூக வட்டத்திலுள்ள ஏனைய மக்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இதன் மூலமாக, சமத்துவத்திற்கான ஒரு பெரியளவிலான உந்துதல் ஏற்பட்டுள்ளது."

அவரது முதலாவது நிகழ்வின் போது, பங்கேற்பாளர்கள் நிதி முகாமைத்துவம் (குடும்ப வரவு செலவு திட்டத்தினை உருவாக்குதல், தனிநபர் வரவு செலவு திட்டம் மற்றும் சேமிப்பு போன்ற விடயங்கள்) மற்றும் சிறிய வணிகத்தினை நடாத்துதல் தொடர்பான விடயங்களையும் கற்றிருந்தார்கள். இந்நிகழ்வின் பின்னர், ஐந்து பங்கேற்பாளர்கள் சுயதொழில் செய்யும் வணிகங்களை அமைத்திருந்தனர்.

பின்னர், 12-18 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களுக்கான உளநல சுகாதாரம் தொடர்பான அமர்வினை நடாத்தியிருந்தார். உள்ளூர் உளவியலாளர் ஒருவரின் உதவியுடன், பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை மற்றும் உளநல சுகாதாரம் தொடர்பாக ஏனையோருக்கு கற்றுக் கொடுத்ததுடன் பால்நிலை தொடர்பாக அவர்களிடம் இருந்த தவறான கருத்துக்களை சவாலுக்குட்படுத்தியிருந்தார்.

அவரது மூன்றாவது நிகழ்விற்காக, அவர் இளைஞர்களுக்கான தலைமைத்துவ நிகழ்வினை நடத்தியிருந்தார். இங்கே, பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை மற்றும் அவர்களது வாழ்வில் அவர்களுக்குள்ள உரிமைகள் தொடர்பாக பெண்கள் கற்றுக்கொண்டிருந்தார்கள்.

“ஒரு சமூகத் தலைவராக, எனது சமூகத்தில் மகிழ்ச்சியற்ற பெண்களை நான் பார்க்கிறேன். நான் அவர்களைத் தெருவில் சந்திக்கும் போது, அவர்கள் அழுகிறார்கள், அவர்களின் கதையை என்னிடம் கூறுவது மட்டுமல்லாமல் அவர்களின் காயங்களை என்னிடம் காண்பிக்கிறார்கள். பெண்கள் தங்கள் குடும்பங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு சோகமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். யாரிடம் முறைப்பாடு செய்வது என்பது பற்றியோ அவர்களின் நிலைமையை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியோ அவர்கள் அறிந்திருக்கவில்லை.”

**பிரியங்கா பிரியதர்ஷினி,**

ஆக்டிவ் சிட்டிசன்,
வலஸ்முல்லை, அம்பாந்தோட்டை



வலஸ்முல்லையில் சிறுவர் திருமணம் என்பது இயல்பான விடயம். பல பதின்ம வயதினர் போதைப்பொருள் / மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஷ்பிரயோக விடயங்களை ஆரம்பிக்கின்றனர், பின்னர் முதிர்ச்சியடையாது குடும்ப வாழ்க்கையை தொடங்குகின்றனர். அவர்கள் தங்களுக்கும் குடும்பத்தினருக்கும் உதவக்கூடிய நல்ல கல்வியினையோ நிலையான வேலையினையோ கொண்டிருப்பதில்லை. பின்னர், வன்முறை ஆரம்பிக்கிறது. அவ்வாறான நிலைமையிலுள்ள பெண்கள் பதற்ற நிலையை தீர்க்கவோ, சேவை நாடிகளை அணுகவோ முடியாத நிலையில் உள்ளனர்.

“பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல்” நிகழ்ச்சி திட்டத்தினூடாக, ஒரு தாயும் அத்பிட்டிய பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியுமான பிரியங்கா தன்னையும் தனது சமூகத்தினையும் முன்னேற்றுவதற்கான கருவிகளை பெற்றிருந்தார்

பிரியங்காவின் கணவர் புகைப்பிடிப்பவர். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், பிரியங்கா தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொண்டார்.

எனவே, அவர் தனது கணவர் மனம் திறந்து பேசுவதற்கும் தினசரி புகைக்கும் சிகரெட்டுகள் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் உதவினார்.

வீட்டிலே நடைபெற்ற ஆரோக்கியமான காந்துரையாடலின் உற்சாகத்தில், அவரது சமூகத்தில் அதிகரித்து வருகின்ற குடும்ப வன்முறைகளினை கையாள வேண்டுமென தீர்மானித்தார்.

இந்த நிகழ்வினை நடாத்துவதற்கு கிராம மட்ட அங்கத்தவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியினைப் பெற்றிருந்தார்.

பின்னர், ஆரோக்கியமான உறவுகளை கட்டியெழுப்பல் தொடர்பாக கற்றுக்கொள்வதற்கு குடும்ப வன்முறையை எதிர்கொள்கின்ற பல குடும்பங்களை அழைத்தார்.

மனிதவள மற்றும் பால்நிலை ஆலோசகர்களின் குரலின் பணிப்பாளரான கபில ரஸ்நாயக்க அவர்கள் சமூக மட்ட விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியிருந்தார்.

இந்த அமர்வுகளில், பிரியங்கா பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்கொள்பவர்கள் சரியான சமூக சேவைகளையும் அதிகாரசபைகளையும் அடைவதற்காக சேவைநாடிகளுடன் தொடர்பு கொள்வதற்கான தகவல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை அவர்களுக்கு விநியோகித்தார்.

“நாங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பல குடும்பங்கள் தங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மீளிணையவும் உதவினோம். இந்த குடும்பங்கள் இன்றுவரை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளன. தற்போது, யாருடன் அல்லது எந்த அமைப்புடன் தொடர்புகொள்ள வேண்டும் என்பதனை அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். இந்த தகவலுடன், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை சார்ந்து செயல்படுவதற்கு சில பங்கேற்பாளர்கள் அதிகார சபைகளைத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.”



மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலையிலுள்ள தங்கவேல் சத்யாவின் கிராமத்தில், பெண்களுக்கான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. அவர்களுக்கு தொழில் இருந்தாலும் கூட, உறுதியான தொழில் அரிது.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை நிகழும் போது, சமூகம் பாதிக்கப்பட்டவரையே குற்றம் சாட்டுகிறது, அவர்களை மேலும் பாதிக்கப்பட்டவராக்கிறது. அதன் விளைவாக, வன்முறையானது கவன எல்லையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், பாதிக்கப்பட்டவர் துஷ்பிரயோகம் எனும் வட்டத்தில் தொடர்ந்தும் சிக்கிவிடுகிறார்.





**"வன்முறைகளுக்காளான பெண்களை சமூகம் ஒதுக்கிவிடுகிறது. எனவே, அவர்களால் சமூகத்தில் துணிவாக நிற்கமுடியவில்லை."**

**த. சத்யா,**

ஆக்டிவ் சிட்டிசன்,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை அடையாளம் கண்டு தீர்த்தல்" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது, அவரது குழு அவர்களது சமூகத்திலுள்ள பிரச்சனைகளை உன்னிப்பாக ஆராய்ந்தார்கள். அவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக 'எதிர்பார்ப்பு மரம்' மற்றும் 'பிரச்சனை மரம்' போன்ற முறையியல்களைப் பயன்படுத்தினார்கள்.

இந்த அனுபவம் அவருடைய தனிநபருக்கிடையிலான உறவுகளை விருத்திசெய்வதற்கு உதவியது. காரணம், வெவ்வேறுபட்ட எண்ணங்களைக் கருத்தில் கொண்டு, உரையாடல்களை கொண்டு நடத்தவும் பதட்ட நிலையை சமாதானம்மிக்க தீர்வுக்கு கொண்டுவரவும் கற்றிருந்தார். அவர் தனது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இந்த திறமைகளை பயன்படுத்துவதாக தீர்மானித்தார்.

சத்யா வறுமையில் இருக்கும் பெண்களை தொழில்துறை பயிற்சிகள் மற்றும் தையல் போன்ற வேலை வாய்ப்புகளுடன் தொடர்பு படுத்துவதற்கு சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தார். அவர் சமுர்த்தி, மாதர் சங்கங்கள்,பெண்கள் சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்ற பல பங்குதாரர்களையும் உள்வாங்கியிருந்தார்.

பயிற்சியின் முடிவில், 20 பங்கேற்பாளர்கள் ஆடை தொழிற்சாலைகளில் வேலைக்காக விண்ணப்பித்திருந்தனர். இங்கே, அவர்கள் அடிப்படை சம்பளமாக ரூபாய் 16,000 / = இனைப் பெற்றனர் மற்றும் எதிர்காலத்தில் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சிலர் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளையும் பெற்றிருந்தார்கள். இருபது பேர் தமது வீடுகளிலிருந்தே நடாத்தக்கூடிய வியாபாரத்தினை ஆரம்பித்திருந்தனர்.

சத்யா பங்கேற்பாளர்களின் வாழ்க்கையிலும் அவர்களின் சமூகத்திலும் அவர் கொண்டு வந்த மாற்றத்திற்காக பெருமிதம் கொள்கிறார். பங்கேற்பாளர்கள் அடுத்த தலைமுறைக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள்.

பங்கேற்பாளர்கள் சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தைக் குறித்து நன்மை சாற்றினர்.

இரு பால்நிலையைச் சேர்ந்தவர்களும் பொருளாதார சுயாதீனம் மற்றும் வீட்டு வருமானத்தில் சம பங்களிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை உணர்ந்தனர்.

இதன் விளைவாக, சத்யா தனது சமூகத்தில் உள்ள பல்வேறு திறமைகளை பனை தொடர்பான தொழிற்சாலையுடன் இணைப்பதற்காக தனது திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு முடிவு செய்துள்ளார்.



மாவிட்டபுரம் பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவரான தனபாலசிங்கம் ராசமணி 'அக்டிவ் சிட்டிஸன்' பயிற்சியில் பங்குபற்றினார். மாவிட்டபுரத்திலுள்ள ராசமணியின் கிராமத்திலிருந்த காணி, சிறிய அளவிலான தோட்டம் செய்ய சிறந்த நிலையில் காணப்பட்டது. இருப்பினும், நிலையான சூரிய ஒளி, ஈரப்பதன் மற்றும் வளமான மண்ணைப் பயன்படுத்துவது பற்றி யாரும் யோசித்திருக்கவில்லை

மாவிட்டபுரத்தில், இலங்கையின் உள்நாட்டுப் போரில் காயமடைந்த பல ஆண்கள் ஊனமுற்றவர்களாக வீடு திரும்பியிருந்தனர். அவர்கள் தமது குடும்பத்தில் பிரதான "வருமானம் மீட்டுபவராக" இருந்த போதிலும், அவர்களால் தமது குடும்பங்களுக்கு உதவ முடிந்திருக்கவில்லை. இதன் விளைவாக, பொதுவாக இருந்த ஆண்களின் வகிபங்கினைப் பெண்கள் நிரப்ப வேண்டியிருந்தது, ஆனால் அவர்களின் கல்வியறிவு போதாமை, மட்டுப்படுத்தப்பட்ட திறன்கள் மற்றும் சமூக இழிவுரைகள் என்பன அதற்கு தடைகளாக காணப்பட்டன.

**"விடயபகிர்வு அமர்வுகளின் போது, பொருளாதார சுயாதீனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் கற்றுக்கொண்டேன். பெண்கள் நிலையான வருமானம் கிடைப்பதுடன் நிதி மற்றும் அவர்களுக்குள்ளான பதற்றங்களை விடுவித்தால் அவர்களால் வீட்டுக்கு பங்களிக்க முடியும்,"**

**த .ராசமணி,**

அக்டிவ் சிட்டிஸன்,
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்



அவருடைய சமூக செயற்பாட்டு செயற்திட்டத்திற்கு, வீட்டுத் தோட்ட முன்முயற்சியைச் செய்ய தீர்மானித்தார். அவர் தனது உள்ளூர் சமூகத்தில் குறைத்து மதிப்பிடப்பட்ட தாய்மார்களுடன் பயன்படுத்தப்படாத வளம் மிக்க நிலங்களை இணைத்தார்.

தாவரங்கள், இயற்கை பூச்சி கொல்லி மற்றும் இயற்கை உரங்களை அருகிலுள்ள உள்ளூர் விவசாய பண்ணையிலிருந்து கொள்முதல் செய்தார். வெளிவாரி வளவாளர்களின் உதவியுடன், தாய்மார்கள் விவசாய நுட்பங்கள் மற்றும் சேதன விவசாய நடைமுறைகளைக் கற்றுக்கொண்டார்கள். போஞ்சி, கத்தரி, தக்காளி, வெண்டி மற்றும் பூசணி ஆகியவற்றை இக் குழு பயிரிட்டது.

அவர்கள் தத்தமது குடும்ப வருவாயை ஈட்டுபவர்களாக வெற்றியீட்டியதால், இந்த நிகழ்ச்சித்திட்டம் பங்கேற்பாளர்களுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அவர்கள் பணம் சம்பாதித்தார்கள்; எதிர்காலத்திற்கான இலாபங்களை சேமித்தார்கள்; அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளர்த்தார்கள். மேலும், இந்தத் திட்டமானது ஓய்வுநேரத்திற்கான தலமாகவும் மாற்றப்பட்டது, ஏனெனில் தாய்மார்கள் சமூகத்தை இணைக்கவும், கட்டியெழுப்பவும், உரையாடவும் இதனைப் பயன்படுத்தினார்கள்.

காலப்போக்கில், இத் திட்டமானது அதிகமான பெண்களை பங்குதாரர்களாக நியமித்தது, அத்துடன் "மகளிர் குழுக்களை" வலுவூட்டியதுடன் அடுத்த தலைமுறைக்கான முன்மாதிரிகளையும் உருவாக்கியது.

இளைஞர்கள் போன்ற பிற பங்குதாரர்களை இணைப்பதன் மூலமும், மா மரங்கள் போன்ற பயிர்களை அதிகமாகப் பயிரிடுவதன் மூலமும் தனது சமூக செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாக்க ராசமணி திட்டமிட்டுகின்றார்.

**"2005 ல் வீட்டு வன்முறைக்கான சட்டம் இருந்தபோதிலும், வீட்டு வன்முறைகள் குறையவில்லை. சட்டரீதியான நடவடிக்கைகளூடாக மட்டும் வீட்டு வன்முறையை ஒழிக்க முடியாது என்பது இங்கே தெளிவாகிறது. மாறாக, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை (VAWG) ஒழிக்க சட்டம், அரசு, பொது மக்கள் மற்றும் உறுதியான தனிநபர்கள் போன்ற பல துறைகள் கூட்டுப் பொறுப்பினை ஏற்க வேண்டும். பாதிக்கப்பட்டவரையும் அவரது உள ஆரோக்கியத்தையும் மட்டுமே வன்முறை பாதிக்கிறது என்ற தவறான எண்ணக்கருவில் நாம் இருக்கிறோம். இது உண்மையல்ல, ஏனென்றால் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையானது (VAWG) அவளில், அவளது குடும்பத்தில், அவள் சமூகத்தில் மற்றும் அவளது நாட்டில் கூட தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை (VAWG) பற்றி நாம் ஒன்றிணைந்து சிந்திக்கும்போது, அதனைத் தடுப்பதில் கவனம் செலுத்தி நாட்டில் வலுவான குடும்பங்களை உருவாக்க முடியும் ".**



**நளினி ரட்னராஜா,**

பால்நிலை மற்றும் மனித உரிமைகள் ஆலோசகர், அமர்வு மட்டுறுத்துனர், மாவட்ட கருத்தவை, யாழ்ப்பாணம்

# ஆண்களின் குரல்கள்

இந்த திட்டம், வன்முறையற்ற சமூகத்தை உருவாக்க ஆண்களையும் சிறுவன்களையும் ஈடுபடுத்துவதில் வலுவான கவனத்தினை செலுத்துகிறது. பாலியல் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான (SGBV) ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வின் மூலம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (VAWG) தொடர்பான தவறான எண்ணக்கருக்களை மீள்பரிசீலிக்கவும் பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையை (SGBV) ஒரு மனித உரிமை மீறலாக உணரவும் ஊக்குவிக்கப்பட்டனர். அவர்கள் பொறுப்புள்ள குடிமகன்களாக இருக்க ஊக்குவிக்கப்பட்டதுடன் அவர்களது உள்ளூர் சமூகங்களில் பாலின சமத்துவத்திற்கான தூதுவராகளாகவும் பரிந்துரைப்பவர்களாகவும் உருவாக்கினார்கள்.

அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலையில், இந் நிகழ்ச்சித்திட்டமானது 'மகிழ்ச்சியான குடும்பங்கள்' மற்றும் 'அன்பான தந்தை' போன்ற நிகழ்ச்சிகளினூடாக ஆரோக்கியமான உறவுகள் என்பதை மையமாகக் கொண்டிருந்தது. தனிப்பட்ட நபர்களின் பங்களிப்பைக் காட்டிலும் குடும்பங்களின் அமைப்பு மூலம் பாலியல் மற்றும் பால்நிலை க் அடிப்படையிலான வன்முறையை (SGBV) எடுத்தியம்புதல் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துமென வளவாளர் கபில ராசநாயக்க நம்பினார்.

அவரது அமர்வான "வேடிக்கை சமையலறை", பால்நிலை சார் மூட வழக்கங்களை சவாலுக்குட்படுத்தியதுடன் பங்கேற்பாளர்கள் வீட்டுப்பணிகள் சார்ந்த தமது முன் எண்ணங்களை சவாலுக்குட்படுத்தியது.

கபிலவின் அமர்வில் பங்கேற்ற, வலஸ்முல்லையின் கலஹிட்டிய கிழக்கைச் சேர்ந்த பிரசாத் சமன் குமார இந்த குறிப்பிட்ட அமர்வை அனுபவித்தார். ஒரு காளான் கறியை சமைக்க ஆண்கள் ஒத்துழைத்தனர், அவர் அதை ஒரு மறக்கமுடியாத அனுபவமாக நினைவு கூர்ந்தார். அவர் வீடு திரும்பியபோது, அமர்வில் இருந்து அவர் பெற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்து கொண்டார்:



" பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையைத் (SGBV) தடுப்பதற்கான வழக்காற்று நியமங்களை குடும்பங்கள் நிறுவ முடியும் என்பதால் நாங்கள் குடும்பங்களை ஈடுபடுத்தினோம். இந்த திட்டத்தின் விழிப்புணர்வு அமர்வுகளின் மூலம் பல ஆண்களின் மனநிலை மாற்றத்திற்கு நாங்கள் உதவினோம்; பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைக்கு (SGBV) எதிராக நிற்கவும் பழைமையான எண்ணங்களை விடுவிக்கவும், புதிய கண்ணோட்டங்களைத் தழுவவும் இந்த சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர தீவிரமாக தீர்வுகளைத் தேடவும் தந்தையர்களை ஊக்குவித்தோம்,"

**கபில ராசநாயக்க,**

பால்நிலை சார் ஆலோசகர் மற்றும்
"மனிதர்களின் குரல்கள்"அமைப்பின் நிறுவனர்



"இவ்வகையான ஒரு நிகழ்ச்சியில் நான் பங்கேற்றது இதுவே முதல் தடவையாகும். அது மனதுக்கு இதமாக இருந்தது; அங்கே ஒரு கரப்பந்து போட்டி, ஒரு சமையல் போட்டி மற்றும் ஒரு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையின் (SGBV) பொதுவான பிரச்சினைகள் தொடர்பாக பேசினோம், அதை அடையாளம் காணவும் அதன் பின்னர் அதற்கு பதிலளிக்கவும் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது பற்றி பேசினோம். நான் எனது சமூகத்திற்குத் திரும்ப சென்றதிலிருந்து, நான் மிகவும் அவதானத்துடனும், அக்கறையுடனும் , மறுமொழியளிக்கக்கூடியவனாகவும் இருந்தேன். நான் கற்றுக்கொண்ட விஷயங்கள் தொடர்பாக எனது குடும்பத்தினர்களிடமும் நண்பர்களிடமும் கூறியிருக்கிறேன்."

**பிரசாத் சமன் குமார,**

கலஹிட்டிய கிழக்கு, வலஸ்முல்லை

"பெண்கள் மற்றும் ஆண்கள் இருவரும் சமூகத்தில் அநீதியையும் வன்முறையையும் எதிர்கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்" என்று கடை வைத்திருப்பவரும் பங்குபற்றுனருமான டி.எம். உப்புல் சாந்த திஸ்ஸாநாயக்க கூறினார். வகுருவெலவில் நடைபெற்ற 'ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வு' மூலம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை (VAWG) எதிர்த்து செயற்பட, தொடர்ந்து தனது ஆதரவையும் பரிந்துரைப்பையும் வழங்க வேண்டும் என்பதை கற்றுக்கொண்டார். "நான் சமூகத்தை மாற்ற உதவுகின்ற முறைமைகளையும் கற்றுக்கொண்டேன். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் (VAWG) நிகழும் போது, அதனைக் கையாள்வதற்கான தைரியமும் கல்வியும் எனக்கு உண்டு," என்று அமர்வு பற்றி அவர் கூறினார்.

ஆக்டிவ் சிட்டிசனின் கற்றல் பயணமான 'நதி' செயற்பாட்டினால் நேர்முகமாக உந்தப்பட்ட உப்புல் சாந்த சமூக மாற்றத்தை அவர் மூலமாகவும், அவரது எண்ணங்கள் மற்றும் செயல்கள் மூலமாகவும் முதலில் தொடங்கப்பட வேண்டும் என நம்புகிறார். அடுத்து , தனது நம்பிக்கைகள் மற்றும் அனுபவங்களை தனது குடும்பத்தினர், பெற்றோர் மற்றும் கூட்டுக் குடும்பத்தினருக்கும் தெரியப்படுத்த எண்ணுகிறார். பின்னர், இந்த பாடங்களை தனது வாழ்க்கையிலுள்ள நண்பர்கள், அறிமுகமானவர்கள், பெரியவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் போன்றோருக்கும் வழங்க விரும்புகிறார். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை (VAWG) பற்றி தனது சமூகத்திற்கு வெளிப்படுத்துவது சிறந்த இலங்கையை உருவாக்க அவர்களுக்கு உதவும் என நம்புகிறார்.



"அடுத்து, நாங்கள் வன்முறை மற்றும் சமூக இடர் பிரச்சினைகளை தீர்ப்பதால் இவற்றை மக்களின் வாழ்க்கை மற்றும் மனதிலிருந்து நீக்க, முடியும். அதை தொடங்குவதற்கு சிறந்த இடம் என்னிடமிருந்து என நான் நம்புகிறேன்."

**டி.எம். உப்புல் சாந்த திஸ்ஸாநாயக்க,**

மொனராகலை



**டபிள்யு.எம். உதான மதுமல்,**

புத்தல, மொனராகலை

நான் ஒரு மனிதனிடம் "வன்முறையை பயன்படுத்த வேண்டாம்" என்று கூறும்போது, அது உண்மையில் அவருக்கு புரியவில்லை, ஆனால் அது ஒரு குழுவில் அவருக்குக் கற்பிக்கப்பட்டால், அந்த அனுபவத்திலிருந்து அவர் மேலும் கற்றுக்கொள்கிறார். நான் குறிப்பாக இந்த திட்டத்தால் தொடங்கப்பட்ட 'ஒன்று சேர்ந்த உரையாடல்களுக்கு', நன்றியுள்ளவனாக இருக்கிறேன்."

"மக்கள் மறுவாழ்விலிருந்து திரும்பியதிலிருந்து , எங்கள் மீனவர் சமூகத்தில் பல சவால்கள் இருந்து வருகின்றன." என்று யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளை பிரதேசத்திலுள்ள நல்லிணக்கபுரம் என்ற கிராமத்தின் தலைவர் முத்துராஜா இன்பராசா கூறினார்.

தனது சமூகத்திலுள்ள ஆண்கள் எதிர் பாலினத்தைப் பற்றிய தங்கள் கருத்தையும் நடத்துமுறையையும் மாற்ற வேண்டும் என இன்பராசா நம்புகிறார். தெருக்களில் நிகழும் பாலியல் துன்புறுத்தலிருந்து, போதைப்பொருள் / மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஷ்பிரயோகத்தினால் தூண்டப்படும் வன்முறை மற்றும் இணைய வன்முறை வரை, அனைத்து வயது பெண்களும் பாலிநிலை சார் வன்முறையை எதிர்கொள்கின்றனர்.

நல்லிணக்கபுரத்தில் அவர் கலந்துகொண்ட 'ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வானது' குடும்பங்கள் ஆரோக்கியமான உறவுகளை வழிநடத்துவதற்கு ஊக்குவித்தது.



"இத்திட்டமானது பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையை (SGBV) அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு எனக்கு உதவியதுடன், குடும்ப அலகிலிருந்து தொடங்கி படிப்படியாக முழு கிராமத்திற்கும் அந்த விடயத்தைப் பரப்பியது. உள்ளூர் சமூகத்தின் குடும்பங்கள் இப்போது ஆரோக்கியமான உறவுகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதுடன் அவர்களின் குடும்பங்களில் பதற்றங்களையும் வன்முறையையும் கையாளும் கருவிகளையும் கொண்டுள்ளனர்"

**எம். இன்பராசா,**

நல்லிணக்கபுரம்,
தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்

# இளைஞர்களின் குரல்கள்



லக்ஷிகா பியுமாலி மொனராகலையிலுள்ள தனது கிராமமான டிக்யாயவில் இணைய வன்முறையுடன் தொடர்புடைய தற்கொலைகள் அதிகரித்து வருவதைக் கவனித்தார். அவரது சமூகத்தில் பல இளையோர்கள் சமூக ஊடகங்களையும் இணையத்தையும் பயன்படுத்தினார்கள்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளில் (VAWG), இணைய வன்முறையையும் உள்ளடக்கியது என்பதை 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை அடையாளம் கண்டு தீர்க்க சமூகங்களை வலுவூட்டல்' மூலம் அவர் அறிந்து கொண்டார். நிகழ்நிலையில் (சமூக ஊடகங்களில்) பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறையை எதிர்த்துப் போராடுதல்' என்ற சமூக செயட்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தனது உள்ளூர் சமுதாயத்தில் உள்ள இளம் மற்றும் வயதான உறுப்பினர்களுக்கு அறிவூட்ட முடிவு செய்தார். சேவை வழங்குநர்கள் போன்ற பல பங்குதாரர்களின் ஆதரவை அவர் உள்வாங்கியதுடன், ஒரு சுவரொட்டி பிரச்சாரத்தைத் தொடங்கினார். இந்த நடவடிக்கைகள் நேர்மறையான முடிவுகளைத் தந்தன, மேலும் நிகழ்நிலையில் வன்முறை நிகழ்ந்தாலும், அது அன்றாட வாழ்க்கையில் உறுதியான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதை சமூகம் அறிந்துகொள்ள உதவியது.

லக்ஷிகா தான் கற்றுக்கொண்ட பாடங்களையும், தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் கொழும்பில் நடந்த தேசிய கருத்தரங்கில் அளிக்கை செய்திருந்தார். ஒன்றிணைந்த உள்ளூர் நடவடிக்-கைகள் ஒரு தேசிய நோக்கத்தை முன்னேற்ற உதவியது என்பதை அவர் இங்கே அறிந்து கொண்டார்.



"ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணாக, கொழும்பில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில், பரந்த பார்வையாளர்களுக்கு முன்னால், எனது சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பேசியத்தில் நான் மிகவும் பெருமை அடைகிறேன். சமூக நடவடிக்கைகளை பிரதிபலிக்கவும், 'நிகழ்நிலையில் (சமூக ஊடகங்களில்) பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறையை எதிர்த்துப் போராடுதல்' எனும் எங்கள் சமூக ஊடக முயற்சிக்காக சமூக செயற்றிட்டங்களை மீண்டும் மீண்டும் அமுல்படுத்துவதற்கும் விழிப்புணர்வை விரிவடையச் செய்யவும் டிக்யாயவிலுள்ள இளைஞர்களை அணிதிரட்டுகிறோம். நான் பாலின சமத்துவத்தையும் வன்முறை இல்லாத சமுதாயத்தையும் அடைய, சமூக மட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தேன்."

**லக்ஷிகா பியுமாலி,**

அக்டிவ் சிட்டிஸன் (டிக்யாய),
தேசிய கருத்தரங்கு, கொழும்பு 2019



"பெண் தலைமைதத்துவ குடும்பத்திலிருந்துவந்து, நான் எதிர்கொண்ட சவால்களில் நான் தனியாக இருப்பதான ஒரு தவறான எண்ணத்தில் இருந்தேன். யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த, மாவட்ட கருத்தரங்கில் ஒரு இளைஞர் மன்றத்தில் நான் பல பெண்களையும் தனியான தாய்மார்களையும் சந்தித்தபோது இது மாற்றமடைந்தது. பெண்களதும் அவர்களது வாழ்வதற்கான போராட்டங்களையும் பற்றிய இதயத்தை நொருக்குகின்ற கதைகளை நான் கேட்டேன்.தங்களுக்காக சொந்தமாக குரல்கொடுக்க முடியாத பெண்களுக்கான குரலாக இருப்பதில் நான் உறுதியாக உள்ளதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தளமாகக் கொண்டு நானும் எனது நண்பர்களும் தொடங்கிய தொண்டு அமைப்பான 'மனிதம்' மூலம் இப்போது அவர்களை வலுவூட்டி வருகிறேன்."

**நிவேதா சிவராஜா,**

அக்டிவ் சிட்டிஸன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
கருத்தாடல் குழுவின் பேச்சாளர் இளைஞர் மன்றம் -
யாழ்ப்பாணக் கருத்தரங்கு-2019

பிரதீப் பிரசன்னா , தனது கிராமமான மொனராகலாவில் உள்ள கெசெல்வத்தையில், குடும்ப பிரச்சனைகள், விவாகரத்து மற்றும் போதைப்பொருள் / மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஷ்பிரயோகம் ஆகியவற்றைக் கவனித்த போதிலும்; அவர்களின் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளுடனான (VAWG) தொடர்பு குறித்து அவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட புரிதலே காணப்பட்டது. அவரது கிராம உரையாடலின் தலைப்பாக "பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள்" (VAWG) இருந்ததேயில்லை. அவர் ஒரு பங்குபற்றுனராக 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை கண்டு தீர்க்க சமூகங்களை வலிவூட்டல்' திட்டத்தில் இணைந்த போது, அவர் அவற்றின் ஒன்றுடன் ஒன்றான தொடர்பினைப் புரிந்து கொண்டார். பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் பல்வேறு காரணிகள் மற்றும் அதன் பல்வேறு வடிவங்களைப் பற்றி 4 நாட்களாக நிகழ்ந்த அமர்வில் அறிந்து கொண்டார்.

'மகிழ்ச்சியான குடும்பங்கள்' என்ற திட்டத்தை அமைப்பதன் மூலம் தனது உள்ளூர் சமூகத்திலுள்ள குடும்பங்களின் பங்களிப்பு மற்றும் கல்வி மூலமாகவும் இந்த பிரச்சினையை கையாள பிரதீப் முடிவு செய்தார்.

அதனை தொடர்ந்து, அவரது குழுவானது 70 பங்குபற்றுனர்களுக்கான 'சந்தோசமான குடும்பங்கள்' பாசறை ஒன்றினை நடாத்தியது. இளைஞர்கள், பெரியவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் போன்ற பல்வேறு பங்குதாரர்கள் தங்கள் உதவிகளை வழங்கினார். உள்ளூர் சமூகத்தில் "பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள்" பற்றிய கருத்தாடல்களை அவரர்கள் இணைந்து நிகழ்த்தினார்கள். தனது உள்ளூர் சமூகத்தில் இவ்வாறான கருத்தாடல்கள், ஒரு உரையாடலின் விளிம்புகளிலல்லாது மையத்தில் இருக்க வேண்டும் என பிரதீப் நம்புகிறார்.

இந்த திட்டத்தின் மூன்றாவது மற்றும் இறுதி நிகழ்விற்காக, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளில் (VAWG) குறிப்பாக வீட்டு வன்முறைகளில் தலையிட்டுத் தீர்ப்பதற்காக உள்ளூர் சமூகத்தில் ஒரு 'விழிப்பூட்டல் குழுவை' உருவாக்க 30 பேரை தேர்ந்தெடுத்தனர்.

பிரதீப், தனது உள்ளூர் சமூகத்திலுள்ள குடும்பங்களுக்கு தனது திட்டம் ஏற்படுத்திய நிலைபேண்தகு தாக்கம் குறித்து மகிழ்ச்சியடைகிறார்.



"இந்த நிகழ்ச்சிக்கு முன்பு பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை பற்றி எனக்கு எந்தவிதமான புரிதலும் இல்லை. பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களை மட்டுமல்ல; அவர்கள் பொருளாதார வன்முறை, உடல் ரீதியான வன்முறை மற்றும் உளவியல் துஷ்பிரயோகங்களையும் எதிர்கொள்கின்றனர்."

**பிரதீப் பிரசன்னா,**

அக்டிவ் சிட்டிஸன்,
கெசெல்வத்தை

"போரினால் கணவனை இழந்த பெண்கள் பலருள்ள புனர்வாழ்வு மையங்களில் நான் பணிபுரிந்திருக்கிறேன். அவர்கள் அழகுக் கலை போன்ற பல்வேறுபட்ட திறன்களில் பயிற்றிவிக்கப்பட்டிருந்தாலும், குடும்ப செயல்பாடுகளிலிருந்தும் விசேஷ நிகழ்வுகளிலிருந்தும் இன்னும் அவர்கள் விலக்கப்படுகிறார்கள், ஏனென்றால், அவர்கள் 'துரதிஷ்டத்தை' கொண்டு வரக்கூடும் என்ற தவறான எண்ணக்கரு காணப்படுகிறது. இது பாகுபடுத்தல் மற்றும் ஓரங்கட்டப்படுதலின் ஒரு வடிவமாகும்; இந்த பிரச்சனைகளை கையாள்வதற்கு , திறந்த மனநிலையுள்ள இளைஞர்களை உள்வாங்குவதற்கு நான் எண்ணியுள்ளேன்.."

**கோபினி அன்டனி ரெக்ஸ்,**

அக்டிவ் சிட்டிஸன்,
மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# சமூக இலகுபடுத்துனர்களின் குரல்கள்



**"சமூகத்திலுள்ள பிரச்சனைகளை புரிந்து கொள்வது பற்றியதே "அக்டிவ் சிட்டிஸன்" திட்டமாகும். இது ஒரு தனிநபரிடமிருந்து சமூகத்திற்கு தகவல்களை வழங்குவது பற்றியதாகும். இது ஒரு புரிந்துணர்வின் செயல்முறையாகும்."**

**றெமோ ஷிஹான்,**
அக்டிவ் சிட்டிஸன் இலகுபடுத்துனர்

புரிந்துணர்வு மீதான ரெமோவின் கவனம், அவரது தனிப்பட்ட செயல்களில் வெளிப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் றெமோவும் அவரது இணை இலகுபடுத்துனரான சிந்துகா விவேகானந்தன் அவர்களும், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் (SGBV) பற்றிய கருத்தாடலைத் தொடங்கியபோது, கூருணர்வான வெளிப்பாடுகள் ஏற்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில், ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதற்கான இறைமையை பங்குபற்றுனர்களுக்கு வழங்குவதற்காக அவர் அறையை விட்டு வெளியேறினார். அமர்வில் அவரது பிரசன்னம் முக்கியமானதாக இருந்தாலும்,, அவர் அங்கு இல்லாமல் இருந்தமை அமர்வு மேலும் ஆக்கபூர்வமாக விரிவடைவதற்கு உதவியது.

"சூழமைவிற்கேற்ற வகையில் கூருணர்வுடன் இருப்பது ஒரு இலகுபடுத்துனரின் பொறுப்பாகும், இதனால், பங்குபற்றுனர்கள் சௌகரியத்தை உணர முடியும்," என றெமோ கூறினார்.

அவரும் சிந்துகாவாவும் பால்நிலை சார்ந்த பங்குபற்றுனர்களின் புரிதலை மேம்படுத்த அக்டிவ் சிட்டிஸன் கருவித்தொகுப்புகளில் உள்ள பல பயிற்சிகளைப் பயன்படுத்தினார்கள். "அதிகார நடை" என்ற பயிற்சியின் மூலம், அதிகாரத்தின் படிநிலை பற்றி பங்குபற்றுனர்கள் அறிந்து கொண்டனர். மேல்நிலையில் யார் நிலைநிறுத்தப்படுகிறார்கள்? கீழ்நிலையில் யார் நிலைநிறுத்தப்படுகிறார்கள்? அதிகாரத்தினை மேலும் புரிந்துகொள்ள, இலகுபடுத்துனர்கள் பங்குபற்றுனர்களிடம் கேள்விகளைக் கேட்டதுடன் மேலும் நடைமுறை உதாரண சம்பவங்களைக் கொண்டு வந்தனர்.

"நாங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெளிக்கொணர கேள்விகளைக் கேட்டோம். அதன்பின் ஒரு நபர் அவ்வாறு செயல்பட்டதற்கான காரணங்களை புரிந்துகொள்வதற்கு ஒரு மீட்டல் சுருக்கத்தினை நாங்கள் உருவாக்கினோம். சமூகத்தில் அவற்றின் செயல்களை விளக்கவும்,அதை யதார்த்த சூழ்நிலையில் கையாளுவதற்கும் எண்ணங்களைத் தூண்டுவதற்கும் இதை நாங்கள் பயன்படுத்தினோம்," என்று றெமோ கூறினார்.

அவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய அமர்வில் அ.கலைமகள் பதிலளித்த விதத்தைக் கவனித்தார். கலைமகளின் ஆற்றலும் உற்சாகமும் அவருக்குத் தனித்துத் தென்பட்டன. அவரது வயதை தாண்டி, அதிகரித்து வரும் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகத்தினை எதிர்த்து நிக்கவும், தனது சமூகமான நல்லிணக்கப்புறத்தினை ஒரு பாதுகாப்பான சூழலாக உருவாக்கவும் அவர் விரும்பினார்.

"இளைஞர்களிடம் கூட இல்லாத சக்தி, அவருக்கும் அவர் குழுவினரிடமும் காணப்பட்டது. அவர்கள் நேரக் கடைப்பிடிப்பாளர்களாகவும் அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் இருந்தனர். அத்துடன் தமது வகிபங்குகளை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டனர்" என்பதையும் றெமோ அவதானித்தார்.

அவரது சமூக செயட்பாட்டு நிகழ்ச்சி திட்டத்திற்காக, அவர் பங்குபற்றுனர்களுக்கு அவர்கள் தங்களை வெளிப்படுத்த ஒரு ஈடுபாடுமிக்க அமர்வையும், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் தொடர்பான சிகிச்சை அமர்வை நிகழ்த்தியதுடன், குடும்பங்கள் மற்றும் பெரியவர்களுக்கான குழந்தைகள் தினத்தையும் அவர் நடாத்தினார். மகிழ்ச்சியானதும் அமைதியானதுமான சமூகத்தை உருவாக்குவதற்கு ஒரு கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் நிகழ்வுகளை நடத்துவதற்கும் அவர்கள் ஒன்றுகூடியபோது, கிராம உத்தியோகத்தர்களும் சமூகத் தலைவரும் சமூகத்தில் மாற்றம் ஒன்றினை கண்டனர்.

"எனக்கு தனிநபர்களைப் புரிந்து கொள்வதற்காக அமர்வுகளை நடத்துவது பிடிக்கும். நடத்தும் போது, அமர்வுகள் சிந்திக்கத் தூண்டுவதாக இருப்பதையும் பங்குபற்றுனர்கள் தங்களையும் தங்கள் சமூகத்தையும் நன்கு புரிந்துகொள்ள உதவியதையும் நான் அவதானித்தேன்," என றெமோ கூறினார்.



**"பெண்கள் மற்றும் இளைஞர்கள் குறிப்பாக பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகளிலிருந்து (SGBV) மீண்டவர்கள் / தங்களை மீட்டவர்கள் பெண்கள் உரிமைகளுக்காக பணி செய்யத் தொடங்குவதனைக் கண்கூடாகப் பார்ப்பதே, நாங்கள் சரியான வழியில் பயணிக்கிறோம் என்பதற்கு வலுவான சான்றாகும். ஒரு இலகுபடுத்துனராக, பால்நிலையை முன்னுரிமைப்படுத்தியுள்ள ஒரு பயிற்சியின் அங்கமாக இருப்பது சுவாரசியமாகவுள்ளது."**

**சிந்துகா விவேகானந்தன்,**
அக்டிவ் சிட்டிஸன் இலகுபடுத்துனர்

மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டையைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான பயிற்சிநெறியை அயந்தி டி சொய்சா மற்றும் கயான் ராஜபக்ஷ ஆகியோர் நடத்தினார்கள். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைப் (VAWG) பற்றி அமர்வுகளை நடாத்த "பங்கேற்றல் நாடகம்" மற்றும் உரையாடல் போன்ற ஆக்கபூர்வமான மற்றும் ஒன்றிணைந்த முறைகளை அவர்கள் பயன்படுத்தினர்.

பங்குபற்றுனர்கள் மனந்திறந்து பேசியதும், அவர்கள் வீட்டில் அனுபவித்த வன்முறைகள் முதலில் மாற வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அக்டிவ் சிட்டிஸனின் "கற்றல் பயணம்" என்ற பகுதியினால் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்ட பங்குபற்றுனர்கள், தங்களுக்குள்ளேயே மாற்றம், அதாவது "என்னிடமிருந்து" தொடங்கியே, தமது நேர்மறையான தனிப்பட்ட அனுபவங்களை பிற சமூக உறுப்பினர்களுக்கு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை (VAWG) எதிர்கொள்ள உதவுவதற்குப் பயன்படுத்தலாம் என்பதை உணர்ந்தனர்.

" ஒரு பங்குபற்றினரும் அவரது கணவரும் தொழிலாக கட்டட வேலை செய்தார்கள். இந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ள முடிவு செய்திருந்தால், அவர் வேலைக்கு சொல்லாததை அவரது கணவர் கண்டித்திருந்தார். அன்றைய இரவு ஆறு அல்லது ஏழு மணிக்கு அவள் வீடு திரும்பியபோது, இரவு வேலைகளை அவள் விழித்திருந்து தாமதமாய் முடிக்க வேண்டியிருந்தது. அவருக்கு இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றியது, ஒரு தெளிவூட்டலாக இருந்ததுடன் தான் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை உணர்ந்தார் என, பங்குபற்றுனர் தனது கணவரிடமிருந்து பெற்ற குறைவான ஆதரவு குறித்து அயந்தி கூறினார்.

ஒன்றிணைந்ததாக தீர்த்து அடுத்து வந்த 2 நாட்களில், தங்கள் சமூக செயற்பாட்டு நிகழ்ச்சி திட்டங்களின் மூலம் தங்கள் நிலையை, சமூகத் தலைவர்களாக வலுப்படுத்திக் கொண்டார்கள்.




## இந்த சமூகத் தலைவர்கள், தமது வீட்டில் நிகழ்ந்த பால்நிலை சார் வன்முறைகளிலிருந்து மீண்டவர்கள் /தங்களை மீட்டவர்கள், ஆனால், அவர்கள் மற்றவர்களுக்கு செவிமடுப்பதுடன் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதை, நாம் அந்த சமூகங்களுக்குள் சென்ற போது அறிந்து கொண்டோம்."

**அயன்தி டி சோய்சா**

அக்டிவ் சிட்டிஸன் இலகுபடுத்துனர்

## "நான் கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த பல பெண்கள் மற்றும் சிறுமிகளுடன் பணிபுரிந்திருக்கிறேன். வாழ்நாள் முழுவதும் அவர்கள் பல்வேறு கஷ்டங்களை சந்தித்திருக்கிறார்கள், ஆனால் ஆண் பங்குபற்றுனர்களைக் காட்டிலும் அதிக அர்ப்பணிப்பையும் பொறுமையையும் வெளிப்படுத்தினார்கள். இந்த பெண்கள், அமைதியாக தமக்குள்ளேயே வளர்த்துக் கொண்ட, தமக்கானதும், தம் குடும்பத்தினருக்கானதுமான கனவுகளைக் கொண்டிருந்ததால், அவர்கள் தங்களை வலுப்படுத்திக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தனர்."

**கயான் ராஜபக்ஷ**

அக்டிவ் சிட்டிஸன் இலகுபடுத்துனர்



# அரசாங்க பங்குதாரர்களின் குரல்கள்

"பங்குபற்றுபவர்களின் சிந்திக்கும் விதம் மாறிவிட்டது. அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சனைகளை மேலும் நம்பிக்கையுடனும் வெளிப்படையாகவும் கூறுகின்றார்கள்."

**நந்தா திஸ்ஸநாயக்க,**
பெண்கள் அபிவிருத்தி அதிகாரி - புத்தல பிரதேச செயலகம்.



ஏனைய பெண்கள் அபிவிருத்தி அதிகாரிகளைப் போல, நந்தா அடிபடை மட்டத்தில் செயற்படுகிறார். ஆம் ஆண்டில் ஒரு வருட,'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல் (VAWG)' பயணத்தை ஆரம்பித்தபோது, செயற்பாட்டுகளிலிருந்து திட்டங்களை எடுத்து அதை பயன்படுத்தி அவருடைய உள்ளூர் சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கு எதிர்பார்கின்றார். நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு (VAWG) வழிவகுக்கும் காரணிகள் மற்றும் பால்நிலை மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறையின்(SGBV) பல வடிவங்கள் பற்றியும் அவர் அறிந்துகொண்டார்.

"பல கருத்தரங்குகள் மூலம் சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகள்; அத்தோடு பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் பற்றியும் அறிந்துகொண்டேன்." என்று கூறினார். புத்தல பிரதேச செயலகத்திலில் உள்ள சமூக மக்களுக்கு இந் நிகழ்ச்சி சென்றடைந்த பின் நேர்மறையான விளைவுகளை அவதானித்துள்ளார். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான செயன்முறைமையாக, நிதி முகாமைத்துவம் மற்றும் சிறு வியாபாரங்கள் பற்றியும் பங்குபற்றுபவர்கள் கற்றுகொண்டார்கள்.

வகுருவெலவில், பல பங்குபற்றுனர்கள் பொருளாதார தடைகளிலிருந்து விடுபடுவதற்கு சிறிய வியாபாரங்களை ஆரம்பித்தார்கள். இதையொட்டி, சமூகத்திலுள்ள ஏனைய மக்களுக்கும் இவர்கள் முன்மாதிரியாக விளங்கினார்கள். அனைவருக்கும் நேர்மறையான குடும்ப சூழலை உருவாக்க அயலவர்களை தம்முடன்இணைய ஊக்குவித்தார்கள்.

முன்பு பெண்கள் தங்களுடைய பிரச்சனைகள் பற்றி வெளிப்படையாக கதைப்பது அரிது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை பற்றி பயிற்றுவித்ததாலும் சேவை வழங்குனர்களுடன் தொடர்ப்புபடுத்தியதாலும்,; இளவயது திருமணம், போதைப்பொருள் / மதுவின் தவறான பாவனையுடன் தொடர்புடைய துஷ்பிரயோகம் அல்லது குடும்ப வன்முறை போன்ற வெவ்வேறு பிரச்சனைகளுக்கு பெண்கள் அமைப்பகளிடம் உதவியை நாடி தொடர்புகொண்டார்கள். பங்குபற்றுபவர்களின் பதில்கோறல்களுக்கு கள அதிகாரிகளின் மறுமொழிகள் மேலும் கருத்தில்கொள்ளும் விதத்திலும் உணர்வுபூர்வமாகவும் இருப்பதாக நந்தா அவதானித்துள்ளார்.

சேவை வழங்குனர்கள் மற்றும் பங்குபற்றுனர்களுக்கிடையில் உள்ள இணைப்பை இந் நிகழ்ச்சி பலப்படுத்தி உள்ளது என நந்தா நம்புகின்றார்; அத்தோடு, இந் நிகழ்ச்சி புத்தல முழுவதும் விரிவுபடுத்துவதற்கு மகிழ்ச்சியை தெரிவிக்கின்றார்.

"எமது அனுபவங்கள் மற்றும் சிந்தனைகளை இன்று பகிர்ந்ததோடு, பங்குபற்றியவர்களும் இன்று அவதானித்த நேர்மறையான பெருபேறுகளை குறிப்பிட்டர்கள். இந் நிகழ்ச்சி ஏனைய பிரதேச செயலகங்களிலும் நடத்துமாறு ஆலோசிக்கின்றேன்."



“பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைக்கு தீர்வுகாண்பதற்காக சமூகத்தினை வலுவூட்டுதல்” எனும் நிகழ்ச்சி திட்டத்திற்காக, உதயகுமாரி என்பவர் யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை வீதிக்கு அருகிலுள்ள சிறிய கிராமமான கோப்பாயினை சேர்ந்த பெண்களுக்கு ஒரு அமர்வினை இலகுபடுத்தியிருந்தார். அவர் பங்குபற்றியவர்களுடன் கலந்துரையாடும் போது, சிறுவர் திருமணமானது அச்சமூகத்தின் ஒரு பிரச்சினை என்பதனை உணர்ந்தார்.

பெற்றோர்கள் கல்வி வாய்ப்பினை பெறாததினாலும், நிலையான தொழிலையோ சமூகத்துடனான தொடர்பினையும் கொண்டிருக்காததினாலும், சிறுவர்கள் பிறப்பு சான்றிதழ் போன்ற முக்கிய ஆவணங்களை கொண்டிருக்கவில்லை மற்றும் பாடசாலைகளில் இணைந்திருக்கவில்லை. அதாவது, சிறுவர்கள் அவர்கள் பெற்றோர்கள் போலவே வறுமை, ஓரங்கட்டப்படல் மற்றும் சமூக ஒதுக்குதல் ஆகிய ஒரே வட்டத்திற்குள் தொடர்கிறார்கள்,

இதனைப் பிரதிபலிக்கும் முகமாக, உதயகுமாரி சிறுவர் திருமணம் மற்றும் இளம்பருவ கர்ப்பம் ஆகியவை குறித்த ஒரு அமர்வினை இலகுபடுத்தியிருந்தார் . பங்கேற்பாளர்கள் தங்கள் குழந்தைகளுக்கான பிறப்பு சான்றிதழைப் சொந்தமாக்கி கொள்ள அவர் உதவினார். அவரது அமர்வின் பின்னர், உடனடியாகவே இரு சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கியிருந்த போது தனது அமர்வு நேர்முகமான ஒரு விளைவினைக் கொண்டிருந்தது என அவர் உணர்ந்தார்.

**“எங்கள் சமூகங்களில் இளவயது திருமணங்கள் காரணமாகப் பிறந்த ஏராளமான சிறுவர்கள் இருக்கிறார்கள். சிலரிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை, ஏனெனில், அவர்களது பெற்றோர்கள் தமது திருமணத்தினை சட்ட ரீதியாக பதிவு செய்திருக்கவில்லை. எனது பணியானது எனது சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என நான் நம்புகிறேன்.”**

**உதயகுமாரி,**

ஆக்டிவ் சிட்டிசன் மற்றும் கிராம பெண்கள் அபிவிருத்தி சங்கம், யாழ்ப்பாணம்







# தேசிய கருத்தவை

நிகழ்ச்சித்திட்டதிலுருந்து இனங்காணப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் பரிந்துரைகளை பகிர்வதற்கு தேசிய கருத்தவை ஒரு அடித்தளமாக அமைந்தது. தேசிய பங்குதாரர்களின் வருகையினால், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் (SGBV) தொடர்பான தேசிய செயற்பாட்டு திட்டத்தின் விளைவுகளை சிறப்புற அடைவதற்கு, உரையாடல்களை உள்ளூர் சார்ந்த பின்னணியிலிருந்து (மாவாட்ட மட்டத்திலிருந்து) தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது. எதிர்காலத்தில், இந் நிகழ்ச்சித்திட்டம் மீளச்செய்ய அல்லது விரிவுபடுத்த வேண்டுமேயாயின், தேசிய பங்குதாரர்களின் உள்ளீடுகள்/ கருத்துக்கள் மற்றும் ஆதரவு அவசியமாகும்.










# பரிந்துரைகள்

உள்ளூர் மாவட்டங்களால் தேசிய பங்குதாரர்களுக்கு பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.




பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான செயன்முறைகளை திறம்பட அமுல்படுத்துவதற்கு, பெண்கள் மற்றும் இளம் தலைவர்களின் ஈடுபாடு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். பதின்ம வயது துடிப்புடன் ஈடுபடுகின்ற பெண்கள் மற்றும் ஆண்கள் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வீடு மற்றும் சமூக மட்டங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதன் மேல் பெண்கள் கவனம் செலுத்த வேண்டும். அதே சமயம், வீதியில் இடம்பெறும் துஷ்பிரயோகம் மற்றும் இணையத்தளம் மூலமான வன்முறை போன்ற சமூக மட்டத்திலுள்ள பிரச்சனைகளுக்கு எதிரான இடையீடுகளில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

சமூகங்களின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் பெண்கள் மற்றும் இளைஞர்கள், சமூக செயட்பாட்டு திட்டத்தினால் ஏற்பட்ட நேர்மறையான விளைவுகளை மீள்பார்வையிட வேண்டும். அவர்கள் பின்-தொடர் செயற்பாடுகள் மூலம் சமூகங்களை தொடர்ந்தும் வலுவூட்டுவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் தலைமைத்துவ நிலையிலுள்ள பங்குதாரர்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான வன்முறைகளுக்கு எதிராக செயற்படுகின்ற, பெண்களுக்காக பரிந்துரை செய்கின்ற ஆண்களினுடைய செயலூக்கத்துடன் ஈடுபாடு அவசியமாகும்.

இதனுள் சமூகம், பால்நிலை உறவுகள் மற்றும் பால்நிலை சமத்துவம் பற்றிய பரந்த, துல்லியமான புரிதல் இருப்பது மிகவும் முக்கியமாகும்

குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்தும் சமூகங்களில் உள்ள வழக்கமான பால்நிலை சார் வழக்காற்று நியமங்கள், சமூக-கலாச்சார நடைமுறைகள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு தீர்ப்பது முக்கியமாகும்.

விழிப்புணர்வையும் புரிதலையும் ஏற்படுத்துவதற்கு பால்நிலை மற்றும் அது சார்ந்த கருத்தியல்களை பாடசாலை பாடத்திட்டத்தில் ஒருங்கிணைப்பது அவசியமாகும்.

சேவை வழங்குவதற்கான வலையமைப்புகளை விரிவுபடுத்துவதற்கும், விழிப்புணர்வை விரிவுபடுத்துவதற்கும், செயலூக்கத்துடன் சமூக தலைவர்களை ஈடுபடுத்துவதற்கும், சேவை வழங்குனர் மற்றும் சமூகங்களுக்கு இடையிலுள்ள உறவுகள் மற்றும் இணைப்புகளை இலகுபடுத்தல்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை இனங்கண்டு தீர்ப்பதனை நோக்கமாகக் கொண்ட கட்டமைக்கப்பட்ட, முறையான மற்றும் தொடர்ச்சியான பயிற்சிநெறி அமர்வுகள் அவசியமாகும்.

அனைத்து மட்டங்களிலும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை தடுப்பதற்கான இடையீடுகளை திறம்பட அமுல்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் முறைமைகளை வலுப்படுத்தல் அவசியமாகும்.

இந்த ஒட்டுமொத்த பரிந்துரைகளும் ஒருங்கிணைந்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் மரியாதையை/ கௌரவத்தை மதிக்கின்ற வன்முறையற்ற சமூகத்தை கட்டியெழுப்ப பங்களிக்கும்.

# ஒருங்கிணைப்பாளர்கள்

"நிகழ்ச்சித்திட்டத்துடனான எமது பயணம் வாழ்க்கையை மாற்றுகின்ற அனுபவமாக எம் அனைவருக்கும் அமைந்தது. விதைக்கப்பட்ட வித்துக்கள் படிப்படியாக முளைப்பதனை நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்களாகிய எம்மால் கண்கூடாகக் காணமுடிகின்றது. எமது நிகழ்ச்சிகளுடன் இணைந்த இளம் பெண்கள் மற்றும் ஆண்கள், அத்துடன் தைரியமான பெண்களின் திறன்களும் ஆற்றல்களும் அளப்பெரியவை. இந்த ஒட்டுமொத்த பரிந்துரைகள் ஒருங்கிணைந்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் மரியாதையை/கௌரவத்தை மதிக்கின்ற வன்முறையற்ற சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கும்."



**டிலீஷா லியனகே,**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு (ஐப்பசி 2016 - பங்குனி 2020)

**சிவாஞ்சலி சிவசண்முகபிள்ளை,**
யாழ் சமூக செயற்பாட்டு மையம் யாழ்ப்பாணம்



**எஸ். பாஸ்கரன்,**
ஜனதக்ஷன், மட்டக்களப்பு








**ப்ரியந்த டி சில்வா,**
புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு, மொனராகலை

**ரசிகா ஸ்வரநமாலி,**
புதுமையான மற்றும் சமூக அபிவிருத்திக்கான அமைப்பு, அம்பாந்தோட்டை

# அடைவு

உள்ளூர் சமூகங்களிலுள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை எதிர்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட சமூக செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் அமர்வுகளின் விளைவுகளை நன்கு அவதானிப்பதன் மூலம் 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்காக சமூகங்களை வலுவூட்டல் (VAWG)' திட்டத்தின் நற்தாக்கம் அளவிடப்பட்டது.

யாழ்ப்பாணம்
மட்டக்களப்பு
மொனராகலை
அம்பாந்தோட்டை




பயிற்சிப் பட்டறைகள், உரையாடல்கள், 'ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகள்' மற்றும் சமூக செயற்பாட்டு திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு அமர்வுகளாவன நான்கு மாகாணங்களிலும் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மொனராகலை, அம்பாந்தோட்டை), 150 ஆண்கள், 150 பெண்கள், 300 இளைஞர்கள் மற்றும் 200 சமூக சேவை வழங்குனர்களை நேரடியாக ஈடுபடுத்தியது. அவர்களின் உள்ளூர் சமூகங்களில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை கையாள்வதற்கான இடையீடுகளை அமுல்படுத்தவும் குழுவாக தீர்வுகளை இனங்கண்டு குறிப்பிடவும் 200 உள்ளூர் சமூக தலைவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**88,955**
**மக்களை அடைந்தது**

#HERSAFESPACE

## சமூக ஊடக பிரச்சாரம்

#HerSafeSpace சமூக ஊடக பிரச்சாரம் வெவ்வேறு சமூகங்களில் உள்ள பெண்கள், ஆண்கள் மற்றும் இளைஞர்களின் குரல்களைப் பிரசுரித்தது. மேலும், இவர்கள் வன்முறை மற்றும் அநீதி சார்ந்த கதைகள் மட்டுமல்லாமல் ஒன்றாக இணைதல், ஒருவரை ஒருவர் வலுவூட்டல் மற்றும் சமூகங்களில் மாற்றத்தை வழிநடத்தல் போன்ற கதைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். பரந்த பார்வையாளர்களுடன் தங்களது கதைகளைப் பகிர்ந்த சமூக தலைவர்களின் குரல்களை சமூக ஊடக பிரச்சாரத்தினால் விஸ்தரிக்கக் கூடியதாக இருந்தது.



# ஆக்டிவ் சிட்டிசன்களின் குரல்கள்



"அக்டிவ் சிட்டிஸனின் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை சார்ந்த பயிற்சிப் பட்டறையில் சமூகமளித்த பின்னர், பொது இடங்களில் நடைபெறும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான சமூக செயாற்பாட்டு திட்டமொன்றை நான் ஆரம்பித்தேன். இளைஞர்கள் பாசறை போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தியதுடன் சமூகம் முழுவதிலும் சமூகத்தில் துண்டுபிரசுரங்களை விநியோகித்தேன். நான் எழுதி இயக்கிய நாடகமானது இதில் தனித்துவமான நிகழ்வாக அமைந்தது. கோவிலின் தலைமை துறவி அவரது உபதேசத்தின் போது நடைபெற்ற எங்களுடைய நாடகத்திற்கு வருகை தருமாறு மக்களை ஊக்குவித்தார்! இந் நாடகம் சிறந்த ஒரு வெற்றியாக அமைந்ததோடு தேசிய கருத்தவையிலும் எங்களுடைய நாடகம் அரங்கேரியது. நாடகமானது எனது சமூகத்தில் ஒரு முக்கிய உரையாடலை எனது நாடகம் ஊக்கப்படுத்தியது என நம்புகின்றேன். இதன் காரணமாக, தொடர்ச்சியான சுய-வளர்ச்சி மற்றும் கல்வி மூலம் தங்களுடைய வாழ்க்கையை மேலும் மேம்படுத்த பல இளம் பெண்களும் ஆண்களும் முனைந்துள்ளார்கள்."

**வாசனா செவ்வந்தி,**

அக்டிவ் சிட்டிஸன்,
வலஸ்முல்லை, அம்பாந்தோட்டை

"கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற ஒரு பயிற்சி அமர்வின் பின், பங்கேற்பாளர் ஒருவர் தனது கணவரிடம் அவருடைய வன்முறையான நடத்தை பற்றி பேசினார். கணவர் தனது நிலைமையை பற்றி அவரிடம் மனம் திறந்து கூறினார்: இவ் உரையாடலுக்கு முன்னர், கணவருக்கு எந்தவித வழிகாட்டலும் இருந்திருக்கவில்லை. மனைவியிடம் உரையாடிய பின், அவரது கணவர் போதைப்பொருள் தடுப்பு பிரிவிடம் உதவியை நாடியதோடு, மது அருந்துதலை குறைப்பதற்கும் ஒரு மாதத்திற்கு மாற்றத்தை பரீட்சிக்கவும் முடிவு செய்தார். அவளுடைய இப் புதிய நம்பிக்கையுடன், பங்குபற்றுபவர் பிரச்சனையின் மூல காரணத்தினைக் கையாண்டார். அவருடைய கணவர் மது அருந்துவதிலிருந்து விடுபட்டு மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கு அவருக்கு மூன்று மாதங்கள் தேவைப்பட்டது."

**நுஸ்ரத் பெனாஸிர் ஃபாருக்,**

ஆற்றுகைப்படுத்துனர் மற்றும் அக்டிவ் சிட்டிஸன் இலகுபடுத்துனர்





" ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் இலங்கையிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களைப் பிரதிபலிப்பதற்கு தேசிய கருத்தவை எனக்கு உதவியது, குறிப்பாக, சமூகங்களிலுள்ள பெண்களை வலுவூட்டல் தொடர்பாக சிந்தித்தேன். இலங்கையில் எதிர்கொள்ளப்படும் பல பிரச்சனைகள், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் போன்றவை பிரித்தானிய நாட்டிலும் இடம்பெறுகின்றது. இதேபோன்ற பல சவால்களை எதிர்கொள்வதற்கு பல நிகழ்ச்சித்திட்டங்கள் இருக்கின்றன. இது உலகளாவிய ரீதியில் தொடர்புபட்டிருப்பதன் பலத்தினை சிந்திக்க வைத்தது. ஏனெனில், சில தடைகளையும் சவால்களையும் கடந்து செல்வதற்கு அவர்கள் அமுல்படுத்தும் திட்டங்களை அவர்கள் பகிர்ந்துகொள்ள முடியும்."

**எட் மோஸ்,**

அக்டிவ் சிட்டிஸன், இலகுபடுத்துனர்(ஐக்கிய இராச்சியம்)
தேசிய கருத்தவை, ஐப்பசி 2019, இலங்கை



"பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை (SGBV) சம்பவங்களை பேருந்துத் தரிப்பிடங்களிலும் பேருந்துகளிலும் (புகையிரத) நிலையங்களிலும் மற்றும் வீதிகளிலும் கூட நான் கண்டிருக்கின்றேன். ஆண்களாக, நாங்கள் பெண்களை அவமதிப்பதில்லை, எனினும் நாம் அவர்களை எவ்வாறு நடத்துகிறோம் என்பதில் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. பெண்கள் எமக்கு சமனானவர்கள். ஆகையால் அவர்களை நாங்கள் மதிக்க வேண்டும் என நான் கற்றுக்கொண்டேன். எங்களுடைய நிகழ்ச்சித்திட்டத்தில், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையை (SGBV) குறைப்பதற்கு நிகழ்வுகளை நடாத்தவும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவும் இளைஞர் கழகங்கள், அரச-சார்பற்ற அமைப்புக்கள், சமூக சபைகள் மற்றும் மாவட்ட சபைகளுடன் இணைந்தோம்."

**டபிள்யூ. எம். பி. ஜ. சந்தலங்க**

அக்டிவ் சிட்டிஸன்,
மதுள்ள, மொனராகலை



"என்னுடைய சமூகத்தில் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை (SGBV) தொடர் சம்பவங்கள் பல காணப்படுகின்றன. ஒரு பொறுப்பான பிரஜையாக, எனது சமூகத்தில் நடைபெறும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைக்கு (SGBV) எதிராக நிற்கவும் பிரதேச செயலகத்தின் உதவியைப் பெறுவதற்கு பரிந்துரைக்கவும் உத்தேசித்துள்ளேன். சமூகத்திற்கு தெரியாத பல சேவை ஒதுக்கீடுகள் உள்ளன என்பதனை பயிற்சிநெறி மூலம் நான் கண்டறிந்தேன். இப் பிரச்சனைகளை குறைப்பதற்காகவும் நமக்கு மட்டுமல்லாது நமது பிள்ளைகளுக்கும் வன்முறையற்ற சமூகத்தை உருவாக்குவதற்காகவும் நாம் தகுந்த இணைப்புக்களை உருவாக்குவதோடு இணைந்து செயற்படவும் வேண்டும்."

**ஜி. எம். தர்மலதா,**

அக்டிவ் சிட்டிஸன்,
புத்தல, மொனராகலை



"இந் நிகழ்ச்சியானது என்னை ஊக்குவித்தோடு எனது தன்னம்பிக்கையையும் மேம்படுத்தியது. நான் திருமணமானவராக இருந்தாலும் தற்போது பல்கலைக்கழகத்தில் சேர்ந்துள்ளேன். நான் ஒரு சில சிரமங்களை எதிர்கொள்கின்றேன்.எனது கல்வியை நிறுத்தி எனது உறவுமுறையில் கவனம்செலுத்த சிந்தித்தேன், ஆனால், இத்தகைய சிந்தனைகள் நிகழ்ச்சிக்கு பின் மாறின. நான் எனது கல்வியை தொடர வேண்டும் என நான் புரிந்து கொண்டேன், ஏனெனில் இதன் மூலம் என்னை நான் பராமரிப்பதற்கு தேவையான நிபுணத்துவம் மற்றும் திறன்களை கொண்டிருப்பேன்."

**சிவாஜினி கிருஷ்ணமூர்த்தி,**

அக்டிவ் சிட்டிஸன்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



"எனது சுற்றுவட்டாரத்தில் இடம்பெற்ற 'ஆண்களுக்கான விழிப்புணர்வு அமர்வில்' நான் பங்குபற்றினேன். எனக்கு இந் நிகழ்வானது கைப்பந்தாட்ட போட்டி, சமையல் போட்டி மற்றும் இசை நிகழ்ச்சிகளுடன் இனிதாக இருந்தது:. பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் (SGBV) தொடர்பான பொதுப்படையான பிரச்சனைகளையும் அதனை அடையாளம் கண்டு மற்றும் அதற்கு பொறுப்பான முறையில் செயற்பட நாங்கள் எடுக்க வேண்டிய படிமுறைகளையும் கலந்துரையாடினோம். எனது சமூகத்திற்கு சென்ற பின், நான் மிகவும் அவதானத்துடனும், கூருணர்வுடனும் செயல்திறனுடனும் இருக்கின்றேன். நான் கற்றுக்கொண்ட விடயங்கள் பற்றி எனது குடும்பத்துடனும் நண்பர்களுடனும் பேசியுள்ளேன்."

**கேஷான் தீரசிங்க,**

அக்டிவ் சிட்டிஸன்

# அவசர/ உடனடி சேவை

பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் (SGBV) தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள்

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு

பெண்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு உதவுவதற்கான தொலைப்பேசி சேவை
**1938**

சிறுவர் தொடர்பான பிரச்சனைகளுக்கு உதவுவதற்கான தொலைப்பேசி சேவை
**1929**


தேவை நாடும் பெண்கள்
**077 5676555**

சாந்தி மார்க்கம்
**0717639898**

க்ராஸ்ரூட்டட் ட்ரஸ்ட்
**+94763488622** (குறுந்தகவல் ஊடாக)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - பொதுமக்கள் முறைப்பாடு
**1955**

இணையத்தள பாதுகாப்புக்கான தேசிய மையம்
**0112691692 / 0112679888**
report@cert.gov.lk



**© British Council 2020**

பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்பானது, கலாச்சார உறவுகள் மற்றும்
கல்வி வாய்ப்புகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அமைப்பு

9 789559 055556